உ

கணபதி துணை.

7-UN-296

பறங்கிப்பேட்டை

ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி

என்னும்

# துரைசாமி ஞானிகள் சரித்திரம்.

இது

பிச்சாண்டார் கோயில் பெருநிலக்கிழார்

சைவத் திருவாளர், இராவ் சாஹேப்,

**கோ. இராசகோபால பிள்ளை F. R. H. S.**

அவர்கள் விருப்பப்படி,

பறங்கிப்பேட்டை வித்துவ சிகாமணி

**ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையால்**

எழுதப்பெற்று வெளியிடப்பட்டது.

வெற்றிவேற் பதிப்பகம், தஞ்சை.

சித்திரபானு சித்திரைமீ

1942.

உ

கணபதி துணை.

பறங்கிப்பேட்டை

ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி

என்னும்

# துரைசாமி ஞானிகள் சரித்திரம்.

இது

பிச்சாண்டார் கோயில் பெருநிலக்கிழார்

சைவத் திருவாளர், இராவ் சாஹேப்,

**கோ. இராசகோபால பிள்ளை F. R. H. S.**

அவர்கள் விருப்பப்படி,

பறங்கிப்பேட்டை வித்துவ சிகாமணி

**ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையால்**

எழுதப்பெற்று வெளியிடப்பட்டது.

வெற்றிவேற் பதிப்பகம், தஞ்சை.

சித்திரபானு சித்திரைமீ

1942.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பறங்கிப்பேட்டை

# ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமிகள் என்னும்

# துரைசாமி ஞானிகள் சரித்திரம்.

## அணிந்துரை.

பாட நலனடையப் பல்விதமாஞ் சித்திபெறக்
கூட அடியவரைக் கோத்திட்டை—நாடன்
பரைசாமி நாதன் பலன்பெற்ற பண்பன்
துரைசாமி ஞானி துணை.

ஞாலமதில் நற்சித்தி நண்ணுவிக்கும் நாம்பணிவோம்
பாலகுரு பற்பப் பதம்.

நீராரும் கடலுடுத்த நிலமகளுக் கெழிலொழுகும் பரத கண்டத்து, அவ்வப்பொழுது தெய்வத் திருவருளை உலகத்துக்கு விளக்கியருளும் பொருட்டு இறைவர் திருவருளால் பெரியார் அவதரிப்பது இயற்கையேயாம்.

சமய குரவர்களும் சந்தான குரவர்களும் அவதரித்துச் சைவ சமய உண்மைகளைத் தோத்திரவாயிலாகவும், சாத்திரவாயிலாகவும் மக்களிடையே பரப்பினர். அவர்கள் "சைவ சமயமே சமயம்" எனவும், 'சிவமே பரம்பொருள்' எனவும் பல அற்புதங்களால் மக்களுக்கு அறிவுறுத்தினர்.

அதன் பின் சந்தான பரம்பரையில் வந்த திருவாவடு துறை, தருமபுரம் முதலிய ஆதீனங்களில் எழுந்தருளியிருந்த மகா சந்நிதானங்களும், முனிவரர்களும் சிவம்பெருக்கிச் சிவானு பூதிச் செல்வராயிருந்தனர்.

அன்றியும், ஆங்காங்கு இடையிடையே பல பெரியார் அவதரித்து மக்கட்குக் கடவுட் பக்தியும், அடியார் பக்தியும் மேலிடச் செய்தனர். அப்பெரியார் கூட்டத்துள் ஒருவரே நாம் இப்பொழுது எழுதியிருக்கும் சரித்திரத்துக்குரிய குழந்தை சுவாமிகள் ஆவர். இக்குழந்தை சுவாமிகட்கு ஸ்ரீ பால சுப்பிர மணிய சுவாமிகள், துரைசாமி ஞானிகள், பாலசித்தர் என்ற வேறு பெயர்களும் வழங்கப்படும்.

இவர் சாங்கு சித்தர். பலப்பல அருள்விளையாட்டுக்களை யெல்லாம் தம் குழந்தைப் பருவத்திலேயே இயற்றித் தெய்வ நம்பிக்கையை மக்களுக்குத் தெருட்டி வந்தார். இதன் விரிவை நூல் முழுவதும் படித்தறிக.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இங்கு வந்தி ருந்த சேற்றூர் சமஸ்தான வித்துவான் கந்தசாமிக் கவிராயர் அவர்கள் நமது பால சித்தரை "இராஜசேகரப் பிள்ளை மகவாக உதித்து மேலாம் இளம் பருவத்தே பல சித்தாடல்புரி துரைசாமி இளங்கோ வாழ்க" என்று புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்.

ஸ்ரீமத் குழந்தைசுவாமிகளுடன் நான் கலந்து பழகும் பேறு பெற்று அவர் நடத்திய அற்புதங்களில் பலவற்றை நேரில் கண்டறிந்தேன். சுவாமிகள் தந்தையார்பால் கேட்டறிந்தவையும் உண்டு. சுவாமிகளின் தந்தையார் இராசசேகரம் பிள்ளையவர் கள் சொல்லி எழுதுவித்த குறிப்புகளும் இதன்கண் உள. இளமையில் யான் சுவாமிகளின்மீது பாடிய பாக்களும் இதனு டன் சேர்க்கப்பெற்றுள. மற்றும், சுவாமிகளைப் பற்றிய செய்தி களைத் தொகுத்துதவும் அன்பர்கட்கு என் நன்றி பெரிதும் உரியதாம். அக்குறிப்புகள் யாவும் அறிவித்த அன்பர்கள் பெயரு டனே அடுத்த பதிப்பில் வெளியிடப்பெறும்.

திருமதி, பண்டிதை அசலாம்பிகை அம்மையார் சுவாமிகள் வரலாற்றைத் தொகுத்துப் பாடல்களாகப் பாடியுள்ளார். அப் பாடல்களையும் இதில் அநுபந்தமாகச் சேர்த்திருக்கிறேன்.

இதனை வெளியிட வேண்டுமெனப் பல வருஷங்களாக எண்ணியும், வேறுபல தமிழ்ப்பணிகளாலும் பிறவாற்றாலும் தாமதிக்க நேர்ந்தேன். அடிக்கடி என்னை இவ்வரும்பணியில் ஊக்கி முற்றுவிக்கச் செய்தவர்கள் என்பெறலரும் அன்பரும், சுவாமிகளின் பரம்பரையில் வந்தவர்களும் ஆகிய **பிச்சாண்டார் கோயில், பெருநிலக்கிழவர், சைவத்திருவாளர்-கோ. இராசகோபால பிள்ளையவர்களே** யாவர். இப் பெருந்தகையார் இதனைப் பதித்தற்கு வேண்டும் எல்லா உதவிகளும் செய்துள்ளார்கள். மற்றும், சுவாமிகள் தந்தையார் பெண்வழித் தோன்றலாகிய குறுக்கை—திரு. க. குருசாமி தேசிகரவர்கள் எழுதி உபகரித்த குறிப்புக்கள் இதற்குப் பெரிதும் உதவின.

**பாலசித்தர் பாதாம்புயம் பாலிக்க.**

பறங்கிப்பேட்டை,
சித்திரபானு சித்திரைத்திங்கள்,
௩௰-௨ ரேவதி.

இங்ஙனம்,
**ப. அ. முத்துத்தாண்டவராயன்.**

சிவமயம்.

# புனைந்துரை.

ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி என்னும் துரைசாமி ஞானிகள் சரித்திரத்தை நான் முற்றும் படித்துப்பார்த்தேன். இவ்வரலாற்றை ஒழுங்கு படுத்தி யாவருக்கும் எளிதில் புலப்படுமாறு செவ்விய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதறிந்து பெரிதும் மகிழ்வுறுகின்றேன். இதனை எழுதியவர் பறங்கிப்பேட்டை வித்துவசிகாமணி ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள். இவர் நமது சுவாமிகளிடத்துப் பேரன்புபூண்டொழுகிய சைவத் தலைமணியாவர். இவர்கள் சுவாமிகளின் மீது அன்பு மேலீட்டால் அவ்வப்பொழுது உவந்து சூட்டிய பாமாலையும் இதன் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுளது. மாதுஸ்ரீ பண்டிதை அசலாம்பிகை அம்மையார் தம் விழுமிய பொருட்செறிவுள்ள 'சுவாமிகள் சரிதப் பதிக'மும் இதன் பிற்பகுதியாக வுள்ளது.

என் அருமைத் தந்தையார் ஸ்ரீ சங்கரைய நாயுடுகாரு அவர்கட்கு ஸ்ரீமத் சுவாமிகளின் முழுத்த அருளுண்டு என்பதை நான் என் இளம் பிராயத்திலேயே நன்கறிவேன். என் தந்தையாருக்கே யன்றி எனக்கும் என் குடும்பத்தாருக்கும் அவ்வருட் பெருக்கம், தோன்றாத் துணையாயிருந்து உதவிவருதல் ஒருதலை. என் தந்தையாரும் ஸ்ரீ சுவாமிகளின் தந்தையார் இராசசேகரம் பிள்ளையவர்களும், திவான்பகதூர் சுப்பராயலு ரெட்டியாரவர்களும் ஒருதாய் வயிற்றுதித்த மக்கள் போன்றே அன்புகொண்டொழுகுதலைச் சிறுவயதிலேயே நான் நன்றாக உணர்வேன். சுவாமிகளும் அவர்கள் தந்தையாரும் வரும்போதெல்லாம் பெரும்பாலும் எங்கள் பங்களாவிலும், திவான்பகதூர் சுப்பராயலு ரெட்டியாரவர்கள் பங்களாவிலும் தங்கியிருப்பார்கள். சுவாமிகள் நிலையைப் பற்றி அக்காலத்து விவரமாக நான் அறிந்துகொள்ளமுடியாமலிருப்பினும் என் தந்தையார் முதலானவர்கள் பக்தி பரவசப்பட்டிருந்து தொண்டு பூண்டொழுகியது என் நினைவிலிருக்கிறது. திரள் திரளாக ஜனங்கள் வந்து தரிசனம் செய்து நல்வாக்குப் பெற்றுச் செல்வதையும் கண்கூடாக நான் கண்டிருக்கிறேன்.

"ஸ்ரீ சுவாமிகள் எங்கள் குடும்பத்தாருக்கும் எனக்கும் சிறப்பு முறையிலும், அனைவருக்கும் பொது முறையிலும் அனுக்கிரகம் செய்யும் பொருட்டே எங்கள் ஜமீனைச் சேர்ந்த மலையாண்

டவர் சந்நிதியில் நித்திய சமாதிகொண்டு கொலு வீற்றிருந்தருளுகின்றது” என்பது மிகையாகாது. சுவாமிகள் கைங்கரிய பாத்திரராய் எங்களையும் ஏற்றுக்கொண்டு அன்றும்—இன்றும்—என்றும் எழுந்தருளியிருத்த லொன்றே எங்கள் முன்னோர் செய்த புண்ணியப் பயன் என்று ஒரொருகால் செம்மாந்திருக்கவும் செய்விக்கின்றது. பல தடவைகளில் சுவாமிகளின் பூரண அநுக்கிரக விசேடத்தையும் நான் பெற்றிருக்கிறேன்.

இனி, இம் மகானின் வரலாற்றை யெல்லாம் தொகுத்து எம்மனோருக்கும் எளிதில் விளங்குமாறு கட்டுரைச் சுவைபட, அன்பு ததும்ப நல்ல முறையில் எழுதி உபகரித்த ஸ்ரீமத் பிள்ளையவர்கட்கு எல்லா நலங்களும் உண்டாக ஸ்ரீ பாலசித்தர் பாதாம்புயத்தைப் பன்முறையும் பணிகின்றேன்.

இதனை வெளியிட்டுதவுதற்குப் பெருந் துணையாயிருந்து பல வகையிலும், சிறப்பாகப் பொருள் வகையிலும் உதவிபுரிந்த என் ஆப்த நண்பர் பிச்சாண்டார் கோயில் திருவாளர், இராவ் சாஹேப் இராஜகோபால பிள்ளை அவர்கட்கு என் மனமுவந்த நன்றியை இதன் மூலமாகவும் தெரிவிக்கின்றேன்.

இங்ஙனம்,

V. குமரப்ப சங்கரைய நாயுடுகாரு,
ஜமீன்தார்,
சென்னப்ப நாயக்கன் பாளையம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



ஸ்ரீ துரைசாமி ஞானிகள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பறங்கிப்பேட்டை
# ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமிகள்
# என்னும்
# துரைசாமி ஞானிகள் சரித்திரம்.

"ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகிலளவில்லை கிளக்கவேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவை கேட்க தக்கார்."

—திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்.

## முத்துக்கிருஷ்ணபுரியும், பறங்கிப்பேட்டையும்.

பொன்னியாற்றின் வளப்பம் மிக்கது சோழவள நாடு. சோழநாடாகிய மங்கைக்கு முகம்போலப் பொலிவது தில்லையம்பதி. மற்றும் பூமிதேவியின் இதயமாக விளங்குவது அச்சிதம்பரமேயாம். ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அம்மையப்பராகிய சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் புரிவதும் அச்சிதம்பரமே. பலப்பல சிறப்பு வாய்ந்த இச்சிதம்பர தலத்துக்கு அணிமையாய் வட கீழ்த் திசையிலே கீர்த்திபெற்று விளங்குவது பறங்கிப்பேட்டை என்னும்பேரூர். இது மிகச் சிறந்த துறைமுகப்பட்டினம். பண்டைக் காலத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஊர்களில் இதுவும் ஒன்று. இவ்வூரில் அவ்வக்காலத்துப் பல பெரியார்கள் தோன்றியும் வசித்தும் பல செயற்கருஞ்

செயல்களைச் செய்திருக்கின்றனர் என்பது வெளிப்படை. இத்தகைய பறங்கிப்பேட்டையின் மேல்புறம் வருணபுரி எனவும் கீழ்புறம் முத்துக்கிருஷ்ணபுரி எனவும் தொன்று தொட்டே வழங்கப் பெறும்.

வருணபுரி க்ஷேத்திர மகிமை சூத சம்ஹிதை தீர்த்த மகிமை உரைத்த அத்தியாயத்திலும், சிதம்பர புராணம் வருண பகவானுக்கு அநுக்கிரகித்த விருத்தாந்தங் கூறுமிடத்திலும், வாருண மான்மியம் என்னும் ஸ்தல புராணத்திலும் காணலாம். இந்த ஸ்தலத்தில் சூரிய பகவான் பேறு பெற்றமையின் இதற்குப் பார்க்கபுரம் என்றும், (Periplus) என்றும் பெயர் உண்டு. போர்த்துகல், உலாந்து, டென்மார்க், பிரஞ்சு, இங்கிலாந்து வியாபாரிகள் போர்த்தோநோவோ, (Porto Novo) பறங்கிப் பேட்டை என்பர். சோழருக்குப் பின் பல்லவர் இந்த நாட்டை ஆண்டு வந்த காலத்தில் இந்நகர்வாசி முத்துக்கிருஷ்ணர் என்பவர் அப்பல்லவரிடத்துத் தேவகாரியங்களை நிர்வகிக்க அதிகாரம் பெற்றார். ஆனதுபற்றி இந்நகர் 13-ம் நூற்றுண்டு தொடங்கி அவர் பெயரால் முத்துக்கிருஷ்ணபுரி எனவும் பெயர் பெறும். (சிதம்பரத்தின் கல்வெட்டுக்கள்) கோல்கொண்டா பீஜப்பூர் சுல்தான்கள், ஆர்க்காடு நவாபுகள், டில்லி பாதுஷாக்கள் மார்மூதுபந்தர் (ஆனைத் துறைமுகம்) என வழங்கினர்.

## பிறப்பும் வளர்ப்பும்.

முத்துக்கிருஷ்ணபுரியிலே குமர கோவிலின் மேலவீதியிலே சந்திரசேகரப் பிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரம்பரைச் சைவ வேளாளர். வேளாளர்க்குரிய உழவும் வாணிகமும் இவர் குடும்பத்துக்கு இயல்பிலே அமையப் பெற்றமையால் பெருஞ் செல்வத்துடனும், செல்வாக்குடனும் இவர் விளங்கினர். இவர் சிவ பக்திச் செல்வம் மிக்கவர். அடியார் பக்தியும் வாய்க்கப்பெற்ற

வர். புறத்தூய்மையுடன் அகத்தூய்மையும் பொருந்திய வர். இவர் செய்த தவப்பயனுல் இவருக்கு ஒரு சற்புத்திரர் அவதரித்தார். 'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத் தால் காணப்படும்' என்றபடி தந்தையினும் மைந்தர் தகவு உடையவராய் எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டார். இம்மைந்தருக்கு இராசசேகரர் என்பது பெயர். இவர் தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிகளில் நல்ல பயிற்சி பெற்றவர். வாணிகத் தொழிலிலும் தலைசிறந்து விளங் கினர். இவர் தகுதிக்கேற்ற செல்வக் குடும்பத்திலேயே பிறந்த ஒரு பெண்மணியை விதிப்படி மணந்தார். அப் பெண்ணருங்கலத்துடன் இல்லறத்தை இவர் இனிது நடத்திவந்தார். இப்பெரியாருக்கு அருந்ததியன்ன பெருந் துதிக்குரிய அம்மனைவியாரிடத்து இளஞ் சூரியனைப்போல் ஓர் ஆண்மகவு உதித்தது. அக்குழவி தோன்றிய காலம் பார்த்திப ஆண்டு மார்கழித் திங்கள் அனுஷ நாள் (1885 – 86) என்பர். தோன்றிய அக்காலத்து நன்னிமித் தங்கள் பல உடன் தோன்றின. உற்றுரேயன்றி ஊராரும் குதூகலித்தனர். பெற்றுரேயன்றி மற்றுரும் பெருமித மெய்தினர். இக்குழந்தையைக் கண்டோரனைவரும் கந் தனே என்பர். சான்றேர் பலரும் சண்முகனே என்பர். பால் மணம் கமழும் இப்பச்சிளங் குழவியைப் பாட்டி யார் பாலசுப்பிரமணியன் எனப் பெயரிட்டு அழைப்பா ராயினர்.

## இளமைப் பருவம்.

இக்குழந்தை சாங்கு சித்தாகலின் ஏனைய குழந்தை களைப்போல் அழுகை முதலிய செயலின்றி ஆனந்தமாய் ஆடல் புரியும். தாய்ப்பாலிலுங்கூட விருப்பில்லாதிருந்தது. பெற்றேர் தமது செல்வத்துக்கு இயைய உயர்ந்த மெத்தை முதலியவைகளில் இட்டாலும் தானே அது தவழ்ந்து தரையிற் படுத்துக்கொள்ளும். மூன்று பிராயம்

வரையில் பேச்சின்றி அது வாளா கிடந்தது. பெற்றோரும் உற்றாரும் மற்றாரும் ஊமைப்பிள்ளையோ இது என்று உள்ளங் கவன்றனர். இறைவனை ஏத்திக் குறையிரந்தனர். இக்குழந்தை உம்மைப் புண்ணியத்தால் திருநீறு, அக்கமணி அணிந்த அன்பர்களைக் காணின் மகிழ்ந்து தாவிச் செல்லும். இக்குழவிக்குப் பிராயம் மூன்று நிறைந்தது. தாய் தந்தையர் குல தெய்வத்துக்கு வழக்கப்படி அபிடேக ஆராதனை விசேடமாகச் செய்வித்தனர். சௌளம் முதலிய கிரியைகளையும் முறைப்படி செய்து முடிக்க முற்பட்டனர். அதுவரையில் வாய்திறவாத அக்குழந்தை அனைவரும் அதிசயிக்குமாறு, 'காழ்ணவினை கழ்மவினை ஏங்கு சீப்பா வாண்டாம், கூமியும் வாண்டாம்' என மழலைமொழியால் கழறியது. ஆகலின் அக்குழந்தையின் விருப்பப்படியே குடுமி முதலியன வையாமல் மொட்டையாகவே விட்டனர்.

## சட்டிப்பரதேசி.

பறங்கிப்பேட்டையின் அணிமையில் ஆனையாங்குப்பம் என்னும் ஊர் உள்ளது. அங்கு ஒரு பெரியார் சமாதி கொண்டுள்ளார். இப்பெரியாரைச் சட்டிப்பரதேசி என்பர். இவர் ஐயாச்சாமி ஐயா எனவும், சாதாக்கியதேவர் எனவும் வழங்கப்பெறுவர். இக்குழந்தை பிறத்தற்கு ஐந்து ஆண்டுகளின் முன்னரேயே இவர் பரிபூரணமாயினர். சட்டிப்பரதேசியார் பரிபூரணமாவதன்முன் இக்குழந்தையின் குடும்பத்தில் பேரன்பு கொண்டிருந்தார். பிற்காலத்தில் அக்குடும்பத்தில் ஒரு சிறந்த பிள்ளை தோன்றும் எனவும், அது துறவியாம் எனவும், சில அற்புதங்கள் நிகழ்த்துமெனவும் அடிக்கடி இவர் சொல்வதுண்டு. இச்செய்தி பின்பு உண்மையாகவே விளங்கியது.

குழந்தை தன் சிறு பருவத்திலேயே உலகத்து மக்களைப் போன்று வேடிக்கை பார்ப்பதில் விருப்பமில்லா

திருந்தது. சிற்சில காலங்களில் கண்ணை மூடிக்கொண்டிருக்கும். சிலகாலம் செல்ல அக்குழந்தை சோதிதான் இறைவன் வடிவம் என்று அனைவருக்கும் வலியுறுத்தியது. சிவபக்தி உள்ளவர்களே தம்மைச் சேர்ந்தவர் என்று கூறும். எவராயினும் தெய்வபக்தி இல்லாதவரைத் தான் பார்க்கவும் கூசும். பசி தோன்றும்போது உணவு வேண்டுமென்று கேட்பதில்லை. 'காமாட்டிப்பயல் வயிறு சாதம் கேட்குது; என்னத்தைத் தின்று தண்ணீர் குடித்தால் இந்த வயிறு நிரம்பும்' என்று சொல்லும். பால், தயிர், நெய், மோர் முதலியவற்றை அது உண்பதில்லை. அவை மாமிசம் என்றும், முக்கண்பாலே பால்; மற்றவை பாலல்ல என்றும் உரைக்கும். இங்கு முக்கண் என்றது மூன்று கண்களையுடைய தேங்காயை.

## குழந்தை சாமியானது.

இக்குழந்தை பருவம் முதிர முதிரச் சிவ ஞானமும் சிவபக்தியுமே முதிர்ந்து தெய்வக்குழவியாக விளங்கியது. ஐந்து வயதளவிலேயே பல நூல்களின் உண்மைக் கருத்துக்களை வேண்டும்போது எடுத்துச் சொல்லும். சில சமயங்களில் தெலுங்கு, கன்னடம், ஹிந்தி முதலிய மொழி பேசுபவரிடத்துத் தாமும் அவ்வப் பாஷையிலேயே பேசி மகிழ்விப்பது உண்டு. இவ்வற்புதச் செயல்களைக் கேட்ட பலர் திரள் திரளாக வந்து குழந்தையைப் பார்க்கத் தொடங்கினர். இதனால் பல இடங்களிலும் இதன் புகழ் பரவியது. கற்றோரும் கல்லாதவரும் காண வருவர். செல்வரும் வறிஞரும் திரண்டு வருவர். ஆடவரும் மகளிரும் அனவரதமும் அக்குழந்தையை விட்டு அகலார். சுற்றத்தாரும் சூழ்ந்து போற்றுவர். உறவினர் மறந்தும் பிரியார். பல்வேறு சமயத்தவரும் பரிவுடன் இக்குழந்தையைக் காணப் பாங்குடன் வருவர். குழந்தை குழந்தைச் சாமியாகி விட்டது. குழந்தைச் சாமியைப் பெரும்பாலும் அக்காலத்து

அறியாதவர் இரார். குழந்தைச் சாமியின் தரிசனத்துக்கு மக்கள் கூட்டங் கூட்டமாக வருவர். சுவாமிகளும் அவ ரவர் பக்குவ நிலைமைக் கேற்ப உபதேசம் செய்யும். அத ணல் இம்மைப் பேறு பெற்ருர் பலர். மறுமைப் பேற்றுக் குரிய வழி பெற்ருர் சிலர். உடற் பிணியோடு பவப்பிணி நீங்குதற்குரிய பீடு பெற்ருர் பலர். பிள்ளைப் பேறு உற்ருர் சிலர். பேய் பிசாசு நீங்கப் பெற்ருர் சிலர். பில்லி சூனியம் நீங்கப்பெற்ருர் சிலர். தீக்கோளின் வலியற்ருர் சிலர். அதி காரிகள் பலர் குழந்தைச் சாமியைத் தரிசித்ததன் பலனுக அதிகாரமும் பொருள் வருவாயும் மிகப் பெற்றனர். இச் செய்திகள் எல்லாம் அக்காலத்து வெளிவந்த செய்தித் தாள்களில் வெளிவந்து உலவின.

## திருவாரூர் சென்றது.

இக்குழந்தைச்சாமி ஏழாம் வயதில் தம்மோடு ஒத்த பருவச் சிறுர்களோடு சில சமயங்களில் ஆடல் புரிவதும் உண்டு. ஒரு சமயம் திருவாரூருக்குச் சென்ற காலத்தில் சில பிள்ளைகளை உடன் அழைத்துச் சென்று அது விளை யாடத் தொடங்கியது. ஒரு வீட்டுக் கொல்லையில் அவரை விதை போடுவதற்கு ஆழமான குழி தோண்டி ஆறப்போட் டிருந்தார்கள். சுவாமிகள் மற்றப் பிள்ளைகளுடன் ஒரு விளையாட்டுச் செய்வதாகக் கூறியது. ஒரு குழியில் உட் கார்ந்து கொண்டு மண்ணுல் நன்ருகத் தம்மை மூடச் செய் தது. அங்குள்ளார் குழந்தைச் சாமியைக் காணுமல் தேடி னர். மற்றப் பிள்ளைகள் அந்தச் சாமியை அவரைக் குழி யில் வைத்து மூடியிருக்கிருேம் என்று கூறி நகைத்தனர். சிலர் அக்குழியில் மூடிய மண்ணை எடுத்துப்பார்க்க சுவாமி கள் ஒரு துன்பமும் இன்றி வெளியே வந்தது.

## முத்தைய சுவாமி கண் பெற்றது.

சென்னப்ப நாயக்கன் பாளையம் மலையாண்டவர் சன்னிதியில் ஒரு பெரியார் வசித்து வந்தார். அவரை முத்

தைய சுவாமிகள் என்பார். அவர் துறவி. பரமயோகி. முத்தைய சுவாமிகள் ஒரு சமயம் குழந்தைச் சாமியைக் காண வந்தார். அவர் கண் மேக நீரினல் ஒளியிழக்கும் தறுவாயிலிருந்தது. அதனையறிந்த குழந்தைச் சாமி அவரைத் தன்னுடன் ஆறு மாதம் தங்கியிருக்க இயலுமாயின் கண் குணமாகிவிடும் என்ருர். அவரும் அதற்கு உடன்பட்டிருந்தார். கண்ணும் குணமாகியது. பரிபூரண தசை வரையில் எவ்வித கெடுதலுமின்றி நல்ல கண் பெற்று அவர் விளங்கினுர்.

## சின்னப்பா முதலியார் மணம் பெற்றது.

முத்தைய சுவாமிகளுடன் வந்த சின்னப்பா முதலியார் என்பவர் சென்னப்ப நாயக்கன் பாளையத்திலுள்ள ஒரு மிராசுதாரரின் குமாரர். இவருடன் பிறந்தார் அறுவர். ஆயினும் இவர் முன் பிறந்தோர் யாவரும் தத்தம் இருபத்தேழாம் பிராயத்தில் இவ்வுலக வாழ்வை விட்டு நீங்குதல் இயல்பாயிருந்தது. முதலியார் குழந்தைச் சாமியைத் தரிசிக்க வந்த காலத்து அவருக்கு வயது இருபத்திரண்டு. நமது சுவாமிகள் முதலியாரை வீட்டுத் தோட்டத்துக்கு அழைத்துக்கொண்டு போயிற்று. அங்குள்ள கிணற்று நீரை எடுக்கச் செய்து நூறு குடம் தம் முடைய கரத்தால் முதலியார் சிரத்தில் விட்டு முழுக்காட்டிற்று. பின் உன்னுடைய ஆயுள் விருத்தியைக் குறித்து இது செய்யப்பட்டது என மொழிந்தது. பின்னர் வீட்டிற்கு வந்தது. தம்மைக் காணவந்த சில பிரமுகர்களில் ஒருவரை நோக்கி உங்கள் பெண்ணை இந்தச் சின்னப்பாவுக்குக் கொடுக்கலாமே என்றது. அவர் ஒன்றும் சொல்லாமல் விழித்தார். சுவாமிகள் அவரைப்பார்த்து உங்கள் பெண்ணின் பொருட்டு வரனைக் குறித்துத்தானே இங்கு வந்திருக்கிறீர்கள் என்றது. அவரும் ஆமாம் என்ருர். ஆனல், இந்தப் பிள்ளைக்குக் கொடுத்தால் மங்கலமா

யிருக்குமே என்று சுவாமிகள் கூறியது. அக்கட்டளையை அவர் மறுக்க முடியாதவரானார். குலம் கோத்திரங்களை விசாரித்தார். உங்களுக்கு எந்த ஊர்? என்றார் பிரமுகர். முதலியார் சென்னப்ப நாயக்கன்பாளையம் என்றார். அவ்வூரிலுள்ள மாஜி மணியம் சபாபதி முதலியாரைத் தங்களுக்குத் தெரியுமோ! அவர் எங்கள் உறவினர் என்றார் பிரமுகர். முதலியார் அவருடைய புத்திரனே யான் என்றார். அதைக் கேட்ட பிரமுகர் குழந்தைச்சாமியின் அருட் பிரசாதத்தை எண்ணி எண்ணி அகமகிழ்ந்தார். முதலியாரைத் தன்னூருக்கு அழைத்துச் சென்றார். முதலியாரும் அவர் ஊராகிய சோழவல்லிக்குச் சென்றார். பிரமுகர் பெண்ணின் தாய்க்கு மணமகனைக் காண்பித்தார். பெண்ணின் தாய் மணமகனுக்கு ஏதேனும் பொருளுண்டோ என்றாள். மணமகனுக்குப் படிப்பைத் தவிர வேறு பண்டம் ஒன்றுமில்லை. படித்த பிள்ளையாயிருத்தலின் நெல்லிக்குப்பம் ஆலையில் ஏதாவது ஒரு அலுவலில் அமர்த்தலாம். சுவாமிகள் வாக்குக்கு மறுதலையாக ஒன்றும் சொல்வதற்கில்லை என்று பிரமுகர் தன் மனையாளுக்குக் கூறினர். பிரமுகர் முதலியாரைப் பார்த்து உங்கள் வீட்டிலிருந்து யாரேனும் ஒருவரைப் பெண் வீடு பார்க்க வரச் சொல்லுங்கள் என்று சொல்லியனுப்பினர்.

முதலியாருக்கு உடன் பிறந்தாள் ஒருத்தி உண்டு. அவளுக்கு வயது ஐம்பத்தைந்து; கைம்பெண். முதலியாரின் தாய்க்கு வயது எழுபத்தைந்து. நன்கு நரைத்துப் பழுத்த கிழவி. இவ்விருவரையன்றி முதலியாருக்கு வீட்டு மனிதர் யாவரும் இல்லை. பெண் வீடு பார்க்கப் போவதற்குப் பொருளுமில்லை. என் செய்வார்? பாவம், பெண் வீட்டார் மணமகனுக்குப் பல கடிதங்கள் எழுதினர். அதிற்குறித்த செய்தி வருமாறு:—

இங்கு பல இடங்களிலிருந்து வந்து பெண்ணைக் கேட்கிறார்கள். ஏதேனும் பதில் சொல்ல வேண்டுமே.

தாங்கள் அமைதியா யிருந்தால் மற்றைக் காரியங்கள் எவ்வாறு நடைபெறும்? என்பது அது.

முதலியார் இக்கடிதங் கண்டார். குழந்தைச்சாமி யிடம் வந்தார். என்ன சுவாமீ! மூலையில் கிடந்தவனை முற்றத்தில் இழுத்துவிட்டீர்கள். நான் தங்களைத் தரிசிக்க வந்தேன். என் தலையில் தண்ணீரை எடுத்துக் கொட்டி னீர்கள். பிரமுகரைப் பெண் கொடுக்கச் சொன்னீர்கள். என் நிலைதான் தங்களுக்குத் தெரியுமே. கல்யாணம் எப் படி நிறைவேறும்? என்று மனம் நொந்து விண்ணப்பித் தார். அதைக்கேட்ட சுவாமிகள் வருந்த வேண்டா. இன்னும் இருபத்தைந்து நாட்களில் பணம் வலிய வரும். மணம் நிறைவேறும். சொல்வதில் நம்பிக்கை இருந்தால் நன்மையாய் முடியும் என்றது. முதலியார் சுவாமிகளைப் பார்த்து சுவாமீ! தங்கள் வாக்கில் நான் நன்றாக நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டுத் தமது ஊருக்கு வந்து சேர்ந்தார்.

சுவாமிகள் சொன்னவாறே இருபத்திரண்டாம் நாள் அவ்வூர் ஜமீன்தார் சங்கர நாயக்கர் ஒரு ஆளை யனுப்பி முதலியாரை அழைத்துவரச் செய்தார். இந்தக் காகிதத்தில் ஒரு கையொப்பமிடும். இத்தொகையைப் பெற்றுக்கொள்ளும் என்றார் ஜமீன்தார். முதலியார் ஏது? என்றார். உம்முடைய தந்தையார் காலத்தில் நிலத்தீர்வை பாக்கிக்காக நிலத்தை ஏலம்போட்டார்கள். சர்க்காருக் குச் சேரவேண்டிய தீர்வை போக அதிக வரவு ரூபாய் நூற்றிருபது. அத்தொகையை முறைப்படி நீர் பெற்றுக் கொள்ளும். உமக்குத் திருப்பிக் கொடுக்கும்படி சர்க்காரி லிருந்து உத்திரவாயிருக்கிறது என்றார் ஜமீன்தார். முதலி யார் கையொப்பமிட்டார்; பணத்தை மகிழ்வுடன் பெற் றார். இனிதாக மணத்தை முடித்தார். இல்லறத்தை இனிது நடத்தினார்.

## திரிபுரசாமி நாயக்கர் வயிற்றுவலி நீங்கப்பெற்றது.

திருப்பாதிரிப்புலியூரில் தாசில்தாராயிருந்த நாராயணசாமி நாயக்கருக்குத் திரிபுரசாமி நாயக்கர் என்னும் ஒரு குமாரர் இருந்தார். அவர் கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தா. அவர் ஏறக்குறையப் பதினெட்டு ஆண்டுகள் வரை வயிற்று வலியினுல் பெரிதும் துன்புற்ருர். பலவித மருந்துகள் உண்டும் அவை பயனிலவாயின. மருத்துவரும் கைவிட்டார். மந்திரங்களாலும் பலிதமில்லை யென்று மந்திரவாதிகளும் கைவிட்டனர். நல்லூழும் நாயக்கரை நணுகியது. தீயூழும் தொலைந்தொழியுங் காலம் சமீபித்தது. நமது குழந்தை சுவாமிகளைப் பற்றிப் பலர் பலவாறு புகழ்ந்து பேசுவதைக் காது குளிரக் கேட்டார். கண் குளிரத் தரிசிக்க அவா மேலிட்டார். ஒரு நாள் பறங்கிப் பேட்டைக்கு வந்து சுவாமிகளைத் தரிசித்தார். சுவாமிகள் கால் ரூபாய்க்குக் கருப்பூரம் வாங்கிவர அவருக்குக் கட்டளையிட்டது. அதனைத் தம்மெதிரில் அப்படியே கொளுத்தச் செய்தது. புகையை நாயக்கர் வயிற்றில் படும்படி செய்தது. அப்புகைபட்ட சிறிது நேரத்திற்குள் அவர் வயிற்று வலி நீங்கப் பெற்ருர்; மகிழ்ந்தார். சுவாமிகள் அருளைப் புகழ்ந்தார். வணங்கி விடை பெற்று ஊருக்குச் சென்ருர். அவர் வாழ்நாள் வரை அந்நோய் அவரைப் பற்ருதொழிந்தது.

## பொன்னுசாமி முதலியார்.

ஒரு சமயம் சிதம்பரத்திலுள்ள பொன்னுசாமி முதலியார் என்பவர் சுவாமிகளைத் தரிசிக்க வந்தார். அவர் செங்குந்தர் மரபினர். அவர் தந்தை சுப்பராய முதலியார் என்பவர். அவர் கலெக்டராபீஸில் குமாஸ்தா வேலையிலிருந்து வந்தார். அவரைக் கண்டதும் சுவாமிகள் உமக்கு இரண்டு மாதத்தில் மாஜிஸ்ட்ரேட் வேலை கிடைக்கும்.

அதற்குமேல் உமக்கு அபிவிருத்தி ஏற்படும் என்றருளிச் செய்தது. திடீரென்று குறித்த இரண்டாவது மாதத்தில் மாஜிஸ்ட்ரேட் வேலை அவருக்குக் கிடைத்தது. முதலியார் சுவாமிகளை வந்து தரிசித்து ஆசீர்வாதம் பெற்றுச் சென்றூர். இவ்வாறு சிலகாலம் அவ்வேலையிலிருந்தார். பிறகு தாசில்தார் வேலை கிடைத்தது. அவர் தற்சமயம் உபகாரச் சம்பளம் பெற்று வருகிறூர்.

மேற்கண்ட பொன்னுசாமி முதலியாருடன் சுவாமியைத் தரிசிக்க வந்தவர் அவருடன் வேலைபார்த்து வந்த மற்றெருரு குமாஸ்தா ஆவர். அவர் கிருஷ்ணசாமி ஐயர் என்னும் பெயருடையார்: தன்னுடைய யோக க்ஷேமங்களைப் பற்றிச் சுவாமிகளைக் கேட்டார். சுவாமிகள் உம்முடைய செய்தி ஆலோசனையிலிருக்கிறது. சில நாட்களுக்குப் பின்பு உயர்ந்த அலுவல் கிடைக்கும் என்ற நல்வாக்குக் கிடைத்தது. அவ்வாக்கின்படியே பிற்காலத்தில் அவர் தாலுக்கா சிரஸ்தேதார் உத்தியோகம் கிடைக்கப் பெற்றூர்.

இராமநாதபுரம் ஜில்லா கோட்டையூரில் க. வீ. ராம. மெ. இராமன் செட்டியார் என்பவர் நெடுநாள் புத்திரப் பேறின்றிக் கவன்றூர். சுவாமிகளை வந்து தரிசித்தார். சுவாமிகள் அருள்கூர்ந்து சந்ததி விளங்குங் காலத்தைக் குறிப்பிட்டது. ஊருக்குச் சென்றூர். தமக்கேற்பட்ட புத்திரப் பேற்றைக் குறித்து நந்தன வருஷம் மாசி மாதம் சுவாமிகளுடைய திருத்தந்தையார் இராசசேகரம் பிள்ளை அவர்களுக்கு எழுதியுள்ளார்.

## மாணிக்கம் பிள்ளை.

ஒரு சமயம் சுவாமிகள் தம் தந்தையாரோடு திருவாரூருக்குச் சென்றது. அப்பொழுது அவ்வூர் செங்கமலம் பிள்ளை குமாரர் மாணிக்கம் பிள்ளை என்பவர் சுவாமிக

ளிடத்து மிகவும் பக்தியுடையவராய் இருந்தார். சுவாமி களைத் தம் வீட்டுக்கு எழுந்தருள வேண்டுமென்று கேட் டுக் கொண்டார். சுவாமிகளும் இணங்கிச் சென்றது. சுவாமிகள் தம் கையிலிருந்த கால் ரூபாய் நாணய மொன்றை அவருக்குக் கொடுத்தது 'இதை உங்கள் அபி விருத்தியின் பொருட்டுத் தந்திருக்கிறேன். இதனைப் பத் திரமாய்ப் பெட்டியில் வைத்திருக்கவேண்டும்' என்று கட்டளையிட்டது. அவர் அதனை மிக மகிழ்ச்சியுடன் பெற் றுப் பாதுகாப்பில் வைத்தார். அவர் ஒரு ரெவின்யூ இன்ஸ் பெக்டராயிருந்தார். உத்தியோகத்தின் நிமித்தம் திரு வெண்காட்டுக்குச் சென்றார். ஒருவாரம் அங்கிருந்தார். அப்பொழுது சேலத்தில் சென்று லாண்டு ரிகார்டு இன்ஸ் பெக்டர் வேலை ஒப்புக் கொள்ளும்படி உத்தரவு கிடைத் தது. இரண்டு வாரம் விடுமுறை பெற்றார் திருவாரூருக்கு வந்து சுவாமிகளைத் திருவெண்காட்டிற்கு அழைத்துச் சென்று உபசரித்தார். அச்சமயம் திருவெண்காட்டில் சிவபெருமானுக்கு உற்சவம் தொடங்கியது. திருவிழா முடியும் வரை தங்கியிருக்க வேண்டுமென்று அவர் சுவாமி களைக் கேட்டுக் கொண்டார். 'அவ்வாறே ஆகுக' என சுவாமிகள் மொழிந்தது.

உத்தியோக விஷயமாய்ச் சேலத்துக்குச் சென்ற மாணிக்கம் பிள்ளை சில நாட்களில் லாண்டு ரிகார்டு தாசில் தாராக நியமனம் பெற்றார். பிறகு கும்பகோணம் தாசில் தாராக இருந்து உபகாரச் சம்பளமும் பெற்று வமிச விருத்தியுடன் வாழ்ந்து வரலாயினர்.

திருவெண்காட்டில் சுவாமிகள் தங்கியிருந்த பொழுது வழக்கம்போல் அடிக்கடி கோவிலுக்குச் சென்று வழிபடுவதில் தவறுவதில்லை. சுவாமிகள் கோவிலுக்குப் போகும்போது அடியார் கூட்டம் ஹர ஹர என்னும் முழக்கத்துடன் அனவரதமும் செல்லும் காட்சி யாவரை யும் பரவசமாக்கும்.

திருவெண்காட்டில் உள்ள முத்துப் பிள்ளை என்பவர் நம் குழந்தை சுவாமிகளிடத்தில் அடிக்கடி வந்து அளவளாவுவார். ஒரு நாள் அவர் அளவளாவியிருக்கும் பொழுது, உம் மனைவியாருக்கும், உமக்கும் இப்பொழுது பேச்சில்லை போலும். இனியும் பேச்சு ஏற்படாது. இரண்டாவது மணம் செய்து கொள்ளும். அம் மனைவிக்குப் புத்திரப் பேறு உண்டாகும். ஆயினும், உமக்கு இறுதியில் துர்மரணம் உண்டாகுமென்று தோற்றுகிறது என்று திருவாய்மலர்ந்தது. சில நாட்கள் சென்றன. சுவாமிகள் கூறியபடியே இரண்டாம் மணம் புரிந்தார். குடும்ப விருத்தியும் ஏற்பட்டது. தாயத்தார் பகை காரணமாக வெட்டுண்டு அவர் இறந்தார்.

## சாமிநாத முதலியாரும் குருவார விரதமும்.

தஞ்சாவூருக்கு அணித்தாக அன்னப்பன் பேட்டை என்று ஒரு ஊர் உள்ளது. அங்கு தாயுமானவ சுவாமிகள் ஆதீன மடாலயம் விளக்கமாக உள்ளது. அவ்வூரில் சாமிநாத முதலியார் என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் மஞ்சக்குப்பத்தை யடுத்த வண்டிப்பாளையம் கந்தசாமி முதலியார் மகள் தாயம்மாளை மணம் செய்து கொண்டார். தாயம்மாள் ஒரே புத்திரி. ஆதலின் மகளையும், மருகனையும் தம் வீட்டிலேயே வசித்து வரச்செய்தார். சுமார் பன்னிரண்டு வருஷங்கள் வரையில் அவர்களுக்குப் புத்திரப் பேறு இல்லை. இருவரும் பல தலயாத்திரை செய்தனர். பல தீர்த்தங்களில் ஆடினர். பல மூர்த்திகளைத் தரிசித்தனர். அதன் பயனாகப் பறங்கிப்பேட்டையிலுள்ள குழந்தைச்சாமியின் கீர்த்தியைத் தெரிந்தனர்.

"மூர்த்தி தலந்தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும்" அன்றோ?

அங்குபோய் இருவரும் தெரிசித்தனர். சுவாமிகள் அவர்களை ஆசீர்வதித்தார். குருவார விரதத்தை இருவரும் நியம

மாக அநுஷ்டித்து வந்தால் ஆண் குழந்தைகள் ஏற்படும் குலம் விருத்தியடையும் என்றார். இருவரும் சுவாமிகள் இட்ட கட்டளையின்படி நியமமாகக் குருவார விரதம் அநுஷ்டித்தனர். அவர்கட்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தனர். அவர்களில் ஒருவர் இரத்தின முதலியார். மற்றவர் சிங்கார முதலியார்.

## தீட்சிதர் மனைவி சித்த சுவாதீனம் பெற்றது.

சிதம்பரம் கீழக்கோபுர சன்னிதி வீதியில் உள்ள ஒரு தீக்ஷிதர் மனைவி பில்லி சூனிய வைப்புக் காரணமாக சித்த சுவாதீனமில்லாதிருந்தாள். அதனால் அவள் ஆடையின்றிச் செல்வதும், பிதற்றிக் கொண்டு திரிவதுமாக இருந்தாள். பல மந்திரவாதிகளைக் கொண்டு இச்செயலை நீக்கத் தீக்ஷிதர் முயன்றார். அவள் எந்த மந்திரவாதியையும் மதிப்பதில்லை. விபூதி மந்திரிக்கும்போது தாம்பாளத்தை எடுத்து வீசி எறிந்து விடுவதும் உண்டு. மந்திரவாதிகள் அஞ்சினர். தீக்ஷிதரும் கவலையடைந்தார். ஒருநாள் குழந்தைச் சுவாமிகளின் பிரஸ்தாபம் அங்கு உண்டாயிற்று. தீக்ஷிதர் நேரே பறங்கிப்பேட்டைக்குச் சென்றார். சுவாமிகளைத் தரிசித்தார் 'உம் மனைவியை ஒரு கழுதை தொடர்ந்திருக்கிறது. அந்தக் கழுதை தொலைய இந்த விபூதியைக் கொண்டுபோய் கொடுக்க' என்றது சுவாமிகள். தீக்ஷிதர் முன் நடந்த மாதிரிகளை நினைந்து விபூதியைக் கொண்டு போக அஞ்சினர். சுவாமிகளிடம் விண்ணப்பிக்கவும் அவர் நா எழவில்லை. சொல்லாமலிருப்பதற்கும் அவர் மனம் இசைந்திலர். என் செய்வார் பாவம்? ஏதோ சொல்ல வாயெடுப்பார். சொல்ல முடியாமல் விழிப்பார். இந்த நிலையை சுவாமிகள் உணர்ந்தது. தீக்ஷிதரை நோக்கி ஐயா, 'எதற்கும் அஞ்சற்க, இத்திருநீற்றைக் கொண்டு போய் உமது பெட்டியில் பத்திரப்படுத்தி வைக்க. தானே வலியவந்து கேட்கும்போது இந்தத் திருநீற்றைக் கொடுக்

கலாம்' என்று கட்டளையிட்டது. தீக்ஷிதர் கட்டளைப் படியே செய்தார். நாட்கள் இரண்டாயின. மனைவி, கணவராகிய தீக்ஷிதரை அணுகி, எனக்காக சுவாமிகள் அனுப்பிய அநுக்கிரக விபூதியை ஏன் பெட்டியில் வைத்திருக்கிறீர்? அதனைக் கொடும் என்றாள். அதைக்கேட்ட தீக்ஷிதர் உன் கெட்ட குணத்தை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேனே. யாவர் கொடுத்த விபூதியாயினும் நீ அங்கீகரிக்கும் வழக்கம் இல்லையே. அதனைப் பக்தி சிரத்தையுடன் ஏற்றுக் கொள்வதாயிருந்தால் தருகிறேன் என்றார். அவளும் அதற்குச் சம்மதித்தாள். விபூதியைக் கொடுத்தார். ஆரவாரமின்றி அடங்கி ஒடுங்கி அன்புடன் தரித்துக் கொண்டாள். உடனே பறங்கிப்பேட்டைக்குப் போய்ச் சுவாமிகளைத் தரிசிக்க வேண்டுமென்று வற்புறுத்தினாள். தீக்ஷிதர் இணங்கவில்லை. சுவாமிகளை நான்மட்டும் சென்று கண்டு உத்தரவு பெற்று வருகிறேன். பிறகு நீ செல்லலாம் என்றார். மனைவி பிடிவாதம் செய்தாள். தீக்ஷிதருடன் புறப்பட்டாள். இருவரும் சென்று சுவாமிகளைத் தரிசித்தனர். சுவாமிகள் அவள் தலையில் நூறு குடம் தண்ணீரை எடுத்துக் கொட்டச் செய்தார். விபூதி கொடுத்து அணிந்து கொள்ளச் செய்தனர். அதுமுதல் அவளுக்குக் குணமாயிற்று. இல்லற வாழ்க்கையை இனிது நடத்தத் தொடங்கினாள்.

## சுவீகார புத்திரர் மோகினியால் வந்த துயர் நீங்கப்பெற்றது.

சிதம்பரத்தில் உபகாரச் சம்பளம் பெற்று வந்த இராமையர் என்னும் பிராமணர் ஒருவர் இருந்தார். அவருக்குப் புத்திரர் இல்லை. அதனால் அவர் சுவீகாரம் செய்து கொண்டார். அப்புத்திரனுக்கு மணம் செய்யும் பருவம் நேர்ந்தது. அக்காலத்து அக்குமாரரை மோகினி என்னும் க்ஷுத்திரக் கிரகம் பீடித்தது. அதனால் சுவீகார குமாரர்

உடல் வலிமையற்ருர். நாளுக்கு நாள் உடல் மெலியலுற்ருர். இதனைக் கண்ணுற்ற இராமையர் பெருவருத்தமடைந்தார். மந்திரவாதிகள் பலரைக் கொண்டு பற்பல சாந்தி செய்வித்தார். அவை அனைத்தும் பயனற்றன. ஐயர் சித்தங் கலங்கினுர். பித்தம் பிடித்தவர் போலானுர். சிந்தனையிலாழ்ந்தார். இவருக்கு ஒரு நண்பர் உண்டு. அவர் இராமச்சந்திர பந்துலு என்பவர். சிதம்பரம் தாலூகா சிரஸ்தேதாராக அவரிருந்து வந்தார். அவர் ஒரு நாள் இராமையரைக் கண்டு க்ஷேமம் விசாரித்தார். உமது மனக் கவலைக்குக் காரணம் என்ன? என்ருர் பந்துலு. இராமையர் பந்துலுவைப் பார்த்து, 'நண்பரே, எனக்கு நிரம்பிய செல்வமிருந்தும் யாது பயன்? என் குமாரன் மோகினியால் பீடிக்கப்பட்டுத் துன்புறுகிருன். சுற்றத்தார் எவரும் அவனுக்குப் பெண் தர மறுக்கின்றனர். மந்திரவாதிகள் பலர் வந்து வந்து பார்த்து அதை விலக்க முடியாமையால் மனஞ் சலித்தனர். இதுவே எனக்குற்ற துயர். என் குமாரனைப் பீடித்த மோகினி தொலைந்தால் என் துன்பமும் தொலையும். என் செய்வது? எல்லாம் சிவன் செயல்' என்று கூறி மனம் நொந்தார். அதைக் கேட்ட பந்துலு, 'ஐயரே, வருந்தாதீர். உமது குமாரனுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது. பறங்கிப்பேட்டை குழந்தைச் சாமியிடம் அழைத்துச் செல்லும்' என்ருர். இராமையரும் புத்திரரை அழைத்துக்கொண்டு சென்று சுவாமிகளை வணங்கினுர் சுவாமிகள் திருநீறு தந்தார். இருவரும் அணிந்தனர். பற்றியிருந்த மோகினியும் பறந்தது. உடம்பில் சுமையேற்றி யிருந்தாற் போலிருந்த துன்பமும் அற்றது. உடலும் வலிமையுற்றது. இருவர் மனமும் சாந்தியடைந்தது. குமாரர் உடம்பும் காந்தியடைந்தது. முன் மறுத்த பலரும் பெண் கொடுக்க ஒருவரை யொருவர் முந்தினர். தன் மகனுக்குத் தக்க ஒரு பெண்ணைத் தேர்ந்து மணம் செய்வித்தார். குமாரரும் புத்திரப் பேற்றுடன் வாழ்வாராயினர். சுவாமி பக்தியில் ஆழ்வாராயினர்.

## ஆநந்த நடேசன் கட்டி தீர்த்தது.

முத்துக்குமர முதலியார் என்ருெருவர் பறங்கிப் பேட்டையில் இருந்தார். அவர் நெல் வியாபாரி. சுவாமிக ளிடத்து உறுதியான அன்புடையவர். ஆயினும் அவர் நெடு நாள் புத்திரப் பேறில்லாதிருந்தார். வழக்கம்போல் அவர் ஒருநாள் சுவாமிகளைத் தரிசிக்க வந்தார். அப்போது சுவாமி கள் அவரைப் பார்த்து 'ஐயா, இதுமுதல் பதின்மூன்றும் மாத்தத்தில் ஒரு ஆண் குழந்தை பிறக்கும். அதற்கு ஆனந்த நடேசன் என்று பெயரிடுக' என்று அருளியது. அவ்வாறே குழந்தை பிறந்தது. சுவாமிகள் கட்டளைப்படியே ஆனந்த நடேசன் என்று பெயரிட்டு அவர் வளர்த்து வந்தார். சில காலஞ்சென்றது. ஒரு சமயம் நம் குழந்தை சுவாமிகள் சில அன்பர்களுடன் சிதம்பரத்திற்கு வந்திருந்தது. ஒரு நாளிரவு திடீரென்று மற்றவர்களைப் பார்த்து 'ஆனந்த நடேசன் அவதியுறுகிறுன். நாம் பார்க்கவேண்டும்' என் றது. உடனே யாவரும் புறப்பட்டு அங்கு சென்றனர். ஆனந்த நடேசன் கட்டியினுல் துன்புற்றதை அறிந்து வேப்பிலை கொண்டு மந்திரிக்கக் கட்டி உடைந்து குணப் பட்டான். இதனைக் கண்ட யாவரும் அதிசயித்தனர்.

## நொண்டி செல்லப்ப முதலியார்.

முத்துக்குமர முதலியாருக்கு சிதம்பரத்தை யடுத்த படுகைக் கிராமத்தில் ஒரு பந்து உண்டு. அவர் நொண்டி செல்லப்ப முதலியார் என்பவர். அவர் இவருக்குத் தர வேண்டிய பெருந்தொகை யொன்றை மோசம் செய்தார். இவர் அதனை சுவாமிக்கு அறிவித்தார். சுவாமிகள் 'நொண்டிக்கு நூறு கிறுக்கா' இருக்கட்டும். கொஞ்சம் கருப்பூரம் கொண்டுவா என்றது. அவர் ஒரு பெருந்தட் டும் கருப்பூரமும் உடனே கொண்டு வந்தார். தட்டில் கருப்பூரத்தைக் கொளுத்தி வைக்கச் செய்தது. நொண்டி செல்லப்ப முதலி வருந்தட்டால் வருந்தட்டும் என்றது.

இக்கட்டளையைப் பலரால் அறிந்தார் படுகையார். குடு குடென்று சுவாமிகளிடம் ஓடி வந்தார். தண்டாகார மாக விழுந்தார், புரண்டார், அழுதார், தொழுதார். மறு படியும், மறுபடியும் விழுந்தார். வணங்கினார். சுவாமி! யான் கெட வாக்களிக்கலாமா? என்றார். 'முதலியாரே நீர் பிறருக்குக் கொடுக்கவேண்டிய தொகையை மோசம் செய்யலாமா? உடனே முத்துக்குமர முதலியாருக்குச் சேரவேண்டிய தொகையை எஞ்சாமல் சேர்ப்பியும். இதுபோன்ற தீய எண்ணங்கள் பலவற்றையும் இப் பொழுதே விட்டொழியும். நீர் உண்மையுடன் நடந்து கொண்டால் முன் போல வாழ்வீர்' என்றது சுவாமிகள். நொண்டி முதலியாரும் தம்பிழை நூறையும் ஒப்புக் கொண்டார். கட்டளைப்படி கடனைத் தீர்த்தார். நலம் பெற்றார். தீய எண்ணம் பலவற்றையும் நீக்கி நல்லெண் ணத்துடன் அவர் நெடிது வாழ்ந்தார்.

செங்கற்பட்டு ஜில்லா வடக்குப்பட்டு கிராமத்தில் சுப்பிரமணிய பிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மஞ்சக்குப்பம் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டில் தலைமை குமாஸ்தா வேலை பார்த்து வந்தார். குழந்தைச் சுவாமிகளிடத்தில் பேரன்புடையவர். அடிக்கடி வந்து இவரை அவர் தரி சித்துச் செல்வது வழக்கம், இவர் தரிசன விசேடத்தாலும் வாக்கு விசேடத்தாலும் சிதம்பரம் டிஸ்ட்ரிக்ட் முன்சீபு வேலை அவருக்குக் கிடைத்தது. கும்பகோணம், திருத் துறைப்பூண்டி முதலிய விடங்களிலும் டிஸ்ட்ரிக்ட் முன் சீபாக இருந்தார். சப் ஜட்ஜாகவும் வேலை பார்த்தார் அவ ருக்கு இரண்டு குமாரர்கள் உண்டு. அவர்களில் ஒருவர் டிஸ்ட்ரிக்ட் முன்சீபாக இருந்து ரிடயர்ட் ஆகியிருக்கிறார். மற்றொருவர் சென்னை ஹைக்கோர்ட்டில் உத்தியோகத்தி லிருந்து வருகிறார் இவ்விரு குமாரரும் தமது தந்தையார் சுப்பிரமணிய பிள்ளையைப் போன்று தமிழறிவும், நல் லொழுக்கமும், சிவபக்தி அடியார் பக்தியும் நிறைந்தவர்

கள். திருப்புகழை நன்கு ஆராய்ந்து தந்தையார் அச்சிட்டிருந்தபடியே இவர்களும் புதிய பதிப்புத் திருத்தமாக வெளியிட்டுள்ளார்கள்.

## தோட்டக்காடு - இராமகிருஷ்ண பிள்ளையும், கோபாலகிருஷ்ண பிள்ளையும்.

செங்கற்பட்டு ஜில்லாவில் தோட்டக்காடு என்று ஒரு கிராமம் உண்டு. அங்கு இராமகிருஷ்ண பிள்ளை, கோபாலகிருஷ்ண பிள்ளை என்ற இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அவ்விருவரும் சென்னை ஹைகோர்ட்டில் வேலைபார்த்து வந்தனர். அவர்களில் இராமகிருஷ்ண பிள்ளை என்பவர் ஆங்கில மொழியில் நல்ல பயிற்சியுள்ளவர். தமிழிலும் பயிற்சி பெற்றவர். பெரும் பற்றுள்ளவர்.

சில புத்தகங்கள் எழுதியுள்ளார் இவர். இவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூல்களில் தமிழ்ச்சுவை ததும்பும். தமிழர் நாகரிகம், நடையுடை பாவனை முதலியன அவற்றில் தலை சிறந்து காணப்படும். காலேஜில் பி. ஏ வகுப்பில் கற்று வருங்காலத்திலேயே ஆங்கில ஆசிரியர் டாக்டர் மில்லர் துரையால் நன்கு மதிக்கப்பட்டவர். அக்காலத்து சென்னை கவர்னராயிருந்த ஸர். கிராண்டப் துரையாலும், ஆங்கிலக்கவிவாணர் ஆல்ப்ரட் டென்னிஸன் துரையாலும் இவர் போற்றப்பட்டவர். இவர் இயற்றியுள்ள ஆங்கில நூல்களின் நடைச் சிறப்பைப் பற்றி ஆங்கில நாட்டில் இவர் பெயரை அறியாதாரிலர்.

இவர் சகோதரர் கோபாலகிருஷ்ண பிள்ளை மாயூரம், விருத்தாசலம் முதலிய இடங்களில் டிஸ்ட்ரிக்ட் முனிசீபாக இருந்தார். சில இடங்களில் சப் ஜட்ஜாகவும் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் விருத்தாசலத்தில் இருந்தபொழுது இராமகிருஷ்ண பிள்ளை அங்கு வந்திருந்தார் சுவாமிகளைப் பற்றிக் கேள்வியுற்றார். சுவாமிகளின்

தந்தையாருக்குத் தான் அங்கு வருவதாகக் கடிதம் விடுத்தார். பின் அங்கு போய்த் தரிசித்தார். அப்பொழுது அவர் உத்தியோக சம்பந்தமான சில செய்திகளைச் சுவாமிகள் கட்டளையிட்டது. பின் அவரைப் பார்த்து, ஐயா, உங்கள் புடவைகட்டியிடத்தில் இரண்டு மாதமாய் ஆத்திரத்துடனும் சிடு சிடுப்புடனும் இருந்து வருகிறீரே! அது ஒழுங்கீனமாயிற்றே! என்றது. இதைக் கேட்ட அவர் திடுக்கிட்டார். எனக்குப் பத்து வருஷமாகச் சந்ததி விருத்தி இல்லை. அதனால் என் மாமன் மாமியார் என் மனைவியின் தங்கையை மணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தினர். நான் அதனை மறுத்து, முதல் மனைவியிடம் புத்திர விருத்தி உண்டானால் உண்டாகட்டும். இன்றேல் வேறு மணம் புரிய எனக்கு விருப்பமில்லை. ஆனால் எனக்கு வேண்டியவர்களுக்கு அப்பெண்ணை மணம் செய்வியுங்கள் என்றேன். அதற்கு அவர்கள் வருத்தமாக நீங்கள் மணம் செய்து கொள்ள விரும்பாவிடில் எங்களுக்கு விருப்பமானவருக்குக் கொடுக்கிறோம் எனச் சினந்து சென்றனர். *

அப்பெண்ணை அவர்களுக்கு வேண்டியவர்களுக்கே மணம் செய்வித்தனர். என் மனைவியும் உடனிருந்தாள். அவளும் எனக்கு அறிவிக்கவில்லை. நானும் அவ்விவாகத்துக்குச் செல்லவில்லை. அது முதல் எங்களிருவருக்கும் மனவருத்தம் உண்டு. அது பிறருக்குத் தெரியாது. இந்த மந்தணத்தைச் சுவாமிகள் சொல்லி விட்டார்களே! இன்று முதல் மனக் குறையை விட்டு விட்டேன் என்று கூறிச் சென்றார்.

## மிஸ்டர் - ஹண்ட்.

மிஸ்டர் ஹண்டு என்பவர் தென்னார்க்காடு ஜில்லா போலீஸ் சூபரின்டெண்ட். அவர் ஒருநாள் கடற் காற்

* செந்தமிழ்த் தொகுதி 10 பகுதி 8 பக்கம் 381-ல் இராமகிருஷ்ண பிள்ளையைப்பற்றியவிபரங் காண்க.

றுக்குச் சென்று திரும்பி வந்தார். புதுப்பாளையத்துக்கு அருகில் வரும்போது இரவு ஒன்பது மணியிருக்கும். நம் குழந்தைச் சுவாமிகளின் தந்தையார் இராசசேகரம் பிள்ளை, திவான்பகதூர் சுப்பராயலு ரெட்டியார், பங்களாவிலிருந்து திருப்பாதிரிப்புலியூரிலுள்ள ஜமீன்தார் சங்கரன் நாயக்கர் பங்களாவிற்கு அப்பொழுது போய்க் கொண்டிருந்தார். இவர் ஏறியிருந்த மாட்டு வண்டி சூபரின்டெண்ட் செல்லும் 'டாக் கார்ட்'டுக்கு முன் சென்று கொண்டிருந்தது. சூப்பிரண்டெண்ட் மிதமிஞ்சிய குடியால் மயங்கி வெறி கொண்டிருந்தார். அதனால் தமது டாக் கார்ட்டை மாட்டு வண்டியின் முன்பு மாறிச் செலுத்தினார். இவர் ஏறியிருந்த வண்டியில் பூட்டப்பட்டிருந்த காளைகள் மிக முரட்டுத்தன முள்ளவைகளாதலின் ஒதுக்க முடியாமல் வேகமாய்ச் சென்று கொண்டிருந்தன. குடி வெறி கொண்ட சூபரின்டெண்ட் விரைவாகத் தமது குதிரையைச் செலுத்தலானார். வண்டியின் அருகில் வந்ததும் அவர் டாக் கார்ட்டிலிருந்து இறங்கினார். இவரும் தமது வண்டியை நிறுத்தச் செய்தார். இறங்கினார். இவர் அவருக்கு மரியாதை செய்து நின்றார். குடியர் கையை ஓங்கி இவரை அடிக்க முயன்றார். தவறிக் குடியர் கை இவர் நெற்றியில் பட்டது. ஆயினும் காயம் ஒன்றுமில்லை. இரவு கழிந்தது. பொழுதும் புலர்ந்தது. வண்டிக்காரன் காலையில் ஒரு போலீஸ் சேவகனுடன் இராத்திரியில் நடந்த செய்கையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். சேவகன் ஓடோடியும் வந்து அதனை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் எல்டர் துரையினிடம் தெரிவித்தான். என்ன நேரிடுமோ என்று பயந்தான். எல்டர் துரையும் பதைபதைத்து சூபரின்டெண்ட் தங்கியிருக்கும் விடுதிக்கு வந்தார். அவரைக் கண்டு சுவாமிகளின் பெருமைகளை எடுத்துச் சொன்னார். சூபரின்டெண்டு எப்படியேனும் இவருடன் சமாதானம் செய்து கொள்ள எண்ணங் கொண்டார். ஆலோசித்தார். இவரை அழைத்து வருமாறு எல்டர் துரை

யையே நேரில் போகச் செய்தார். அவரும் இவரிடத்தில் வந்து சூபரின்டெண்டெண்டு விருப்பத்தை வணக்கமாகத் தெரிவித்துக்கொண்டார். தன்னுடன் வரவேண்டுமென வேண்டினார். இவர் அவரைப் பார்த்து ஐயா, உங்கள் சூபரின்டெண்டெண்டு நமக்குப் பழக்கமில்லாதவர். பழக்கமில்லாதவர் யாவராயினும் நாம் அங்கு வரும் வழக்கமுமில்லை. அன்றியும் அவர் நேற்றிரவு நம்மிடம் நடந்து கொண்ட மாதிரி மிக மிக வருத்தத்தைத் தருவதாகும். அத்தீய குணமுடையாரைச் சென்று பார்ப்பதும் நன்றல்ல என்று கூறி மறுத்துவிட்டார். எல்டர் துரை எவ்வளவோ பார்த்தார் இவரும் பிடிவாதமாக வர முடியாது என்று சொல்லிவிட்டார். இராசசேகரர் கூறியதை எல்டர் அக் குடியருக்கு அறிவித்தார். எப்படியேனும் இவரை அவர் வருவிக்கப் பல முயற்சிகள் எடுத்துக் கொண்டார்.

இராசசேகரருக்குக் குடியர் கிரிமினல் குற்றச் சாட்டுச் செய்து அப்பொழுதே அறிவிப்பு ஒன்று அனுப்பினார். சேகரர் பெற்றுக்கொண்டார். அதில் 'பறங்கிப்பேட்டையிலிருந்து இங்கு வந்திருக்கும் இராசசேகரம் பிள்ளையாகிய நீர் உம்முடைய குழந்தையை வைத்துக்கொண்டு பொதுமக்களை ஏமாற்றம் செய்து வருகிறீர் என்பதாக நமக்குத் தெரிய வருகிறபடியால் இன்றைய தினமே விசாரணைக்காக நம்முடைய பங்களாவில் நேரில் வந்து ஆஜராக வேண்டும். தவறினால் சட்டப்படி நடவடிக்கை நடத்தப் பெறும்' என்று எழுதப்பட்டிருந்தது. இதனையறிந்த சேகரர் உத்தரவின்படியே குடியர் பங்களாவிற்குச்சென்றார். எழுத்து மூலமாகத் தமது வாக்குமூலத்தைக் கொடுத்தார். குடியர் இராசசேகரரைப் பார்த்து ஏன் நேரில் வாக்குமூலம் தரவில்லை? என்றார். நம்மிருவருக்கும் நேற்று முந்தை நாள் மனஸ்தாபம் உண்டாயிற்றே அதனால் உங்கள் பங்களா எல்லைக்குள் நேரில் வாக்கு மூலம் கொடுக்க எனக்கு மனமில்லை. ஆனால் வெளிப்படையாக

உங்கள் கச்சேரியில் விசாரிப்பீர்களாயின் நேரில் தக்க விடை சொல்லச் சித்தமாயிருக்கிறேன்' என மொழிந்தார். விடை பெற்று வீட்டுக்குச் சென்றார். மறுநாட் காலையில் குடியராகிய ஹண்ட் ரெட்டியார் பங்களாவிற்குத் தாமே வலிய வந்தார். சேகரரையும் ரெட்டியாரையும் சந்தித்தார். தமது குற்றத்தை மன்னிக்கும்படி பலமுறை வேண்டினர். விடை பெற்றுச் சென்றார். சென்ற ஒருவாரத்தில் உத்தியோகங் காரணமாக ஏற்பட்ட எதிர்பாராத குற்றத்தால் உத்தியோகத்தை இழந்தார். அவ்வூரினின்றும் அகன்றார்.

## சங்கர நாயக்கர் கல்யாணம்.

ஒரு சமயம் குழந்தை சுவாமிகள், சென்னப்ப நாயக்கன் பாளையம் ஜமீன்தார் சங்கர நாயக்கர், திவான்பகதூர் சுப்பராயலு ரெட்டியார் தந்தையார் சேகரர் ஆகியோருடன் மயிலம் சென்றிருந்தனர். அங்கு எழுந்தருளியுள்ள முருகவேளுக்கு விசேடமாக அபிடேக ஆராதனைகள் அன்று நடாத்துவித்தனர். மாகேசுவர பூசையும் சிறப்புற நடைபெற்றது. அப்பொழுது நம் குழந்தை சுவாமிகள் ரெட்டியார் மடியில் உட்கார்ந்திருந்தது. சங்கர நாயக்கர் முதலானவர்கள் எதிரில் இருந்தனர். சுவாமிகள் அங்கிருந்த பலருடனும் பேசிக் கொண்டிருந்தது. நாயக்கரைப் பார்த்து சாலகத்தில் துரட்டுக்கோலை விட்டிழுப்பதுபோல் விதி விதி யென்று இரண்டு மாதங்களில் கல்யாணம் நடைபெறப் போகிறது என மொழிந்தது. அவ்வாறே அக்கல்யாணம் நடைபெற்றது. ஜமீன்தாரரை அவருடைய உற்றார் உறவினர் ஒரு குறிப்பிட்ட பெண்ணை மணஞ் செய்து கொள்ள வேண்டினர். அவர் மறுதளித்து வந்தார். அப்பெண்மணி ஜமீன்தாரருக்குத் தன் கையால் ஒரு கடிதம் எழுதி விடுத்திருந்தது. அவரையே தான் மணந்துகொள்ள விரும்புவதாகவும், ஜமீன்தார் மறுதளித்தால் தான் வேறு எவரையும் மணம்புரிய விரும்பவில்லை யென்றும், கிணற்றி

லாவது ஆற்றிலாவது விழுந்து தன் உயிரை விட்டுவிட ஆயத்தமாயிருப்பதாகவும் அக்கடிதத்தில் கண்டிருந்தது. படித்தார் ஜமீன்தார். மணம்புரிய மனமும் இல்லை. மறுக்கவும் அஞ்சினர். பெண் பழிக்கு மிகவும் வருந்தினர். விதியை வெல்ல முடியாதென உணர்ந்தார், சுவாமிகள் வாக்குப் பொய்யாதெனத் துணிந்தார். அப்பெண்ணை மணந்தார். சில நாட்களில் அப்பெண்மணி மக்கட் பேறின்றி இவ்வுலக வாழ்வையும் நீத்தாள். ஒருசமயம் சுவாமிகள் நாயக்கர் முதல் மனைவியை நோக்கி உன் கைப் பெட்டியிலுள்ள பவழமாலை இருக்கிறதா? என்றார். அவ்வம்மையார் பார்த்துவிட்டுக் காணமல் திகைத்தார். சுவாமிகள் அம்மா வருந்தாதே. உன் கணவருக்குத் தமையனர் வீட்டை விட்டு நெடுநாள் பிரிந்திருந்த ஒருவர் இரண்டு நாட்கள் முன் வந்தார். அவர் அதை எடுத்துக்கொண்டு போய் இன்னுருடைய கள்ளுக்கடையில் வைத்து விட்டுக் கட்குடித்திருக்கிறார். அக்கடைக்காரனுக்கு ரூபா மூன்று கொடுக்க வேண்டியிருக்கும் என்றார். அவ்வாறே சென்று விசாரித்ததில் உண்மையாக இருந்தது. மூன்று ரூபாய் கொடுத்துப் பின் பவழமாலையை மீட்டு வந்தனர்.

## கவலைப்படாதே என்றது.

வண்டிப்பாளையம் வேங்கடசாமி பிள்ளை என்பவர் கடலூரில் தாசில்தார் உத்தியோகம் பார்த்து வந்தார். ஜமாபந்திக்கு அவர் போயிருந்தபொழுது அவருக்கு ஒரு ஆபத்து நேர்ந்தது. அதனைச் சுவாமிகளிடத்து அவர் விண்ணப்பித்துக் கொண்டார். சுவாமிகளின் ஆசிமொழி பெற்றார். திரும்பவும் அவ்வாபத்து நீங்கி உத்தியோகத்தை யடைந்தார். அவர் விருத்தாசலத்தில் தாசில்தாராக இருந்த காலத்தில் அவருக்கு உதடு இல்லாக் குழந்தை யொன்று பிறந்தது. மிக்க கவலையடைந்தார். சுவாமிகளிடம் சென்றார். வந்த காரணத்தை உடனே சுவாமிகள் அவரிடம் தெரிவித்தது. அக்குழந்தை நாளை

இறந்துவிடும். நீ கவலைப்படாதே என்றது. கட்டளைப் படியே மறுநாள் அக்குழந்தை மரித்தது.

தரங்கம்பாடியைச் சேர்ந்த பொறையாற்றில் சண்முகம் செட்டியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் அம்மையால் பீடிக்கப்பட்டு வருந்தினர். அம்மை வடுக்களால் அவர் உடல் விகார வடிவம் பெற்றிருந்தார். சுவாமிகளிடம் அவர் மிகவும் அன்புள்ளவர். தொண்டு செய்து சுவாமிகளின் ஆசிக்குரியவரானர். ஒருநாள் நள்ளிரவில் சுவாமிகள் பிரசாதம் தந்தது. அதனைப் பெற்றுப் புனிதராயினர். பின் அவர் ஒரு பெண்ணை மணந்து புத்திரப் பேற்றுடன் வாழ்ந்து வந்தார்.

## சுந்தர ரெட்டியார்.

தென்னர்க்காடு ஜில்லா கடலூர் தாலுக்கா கிருஷ்ணபுரம் கிராமத்தில் திருக்காம ரெட்டியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் குமாரர் சுந்தர ரெட்டியார் என்பவர். சுந்தர ரெட்டியார் சுவாமிகளிடம் பக்தியுள்ளவர். சுவாமிகளின் உத்தரவின்படி இங்கிலாந்துக்கு அவர் சென்ருர். மூன்று வருஷங்கள் அங்கு தங்கியிருந்தார். டாக்டர் பரீட்சைகளில் நல்ல தேர்ச்சியும் நன்மதிப்பும் பெற்றுத் திரும்பி வந்தார். விசாகப்பட்டினம், புதுக்கோட்டை முதலிய இடங்களில் டாக்டராயிருந்தார். சென்னை அரசாங்க வைத்தியக் கல்லூரியில் முதலுதவி விரிவுரையாளராயிருந்து உபகாரச் சம்பளம் பெற்றுப் புகழுடன் விளங்குகின்ருர்.

மயிலாப்பூரில் மகாதேவ ஐயர் என்பவர் பிரபல வக்கீலாயிருந்தவர். அவர் தமையனர் சுப்பராய ஐயர் பி. ஏ. பி. எல்., கள்ளிக்கோட்டையில் ஜட்ஜ் வேலை பார்த்து வந்தார். அவர் பெண் நோயால் மெலிவுற்றிருந்தாள் எவ்வளவோ வைத்தியங்கள் செய்தும் குணப்படவில்லை. எலும்பு எலும்பாக அவள் உடல் இருந்தது.

ஜட்ஜ் கவலையுற்ருர். மகாதேவ ஐயர் அப்பெண்ணை சுவாமிகளிடம் அழைத்து வந்தார். சுவாமிகள் திருநீறு தந்து அநுக்கிரகம் செய்தது. அவள் உடம்பு முன்புபோல நன்னிலை யெய்தியது. புத்திரப் பேறும் உண்டாயிற்று. இல்வாழ்க்கையை இனிது நடாத்தி வந்தாள்.

## வெண்பாப் புலியின் கிலி.

சென்னையை யடுத்த அரண் வாயிலில் வெண்பாப் புலி வேங்கடசுப்ப பிள்ளை என்ருெருவர் இருந்தார். ஒரு சமயம் அவர் இவரைப் பார்க்க வந்தார். இவர் திருவருட் செல்வம் பெற்றவரேயன்றிக் கல்விச் செல்வம் நிரம்பாதவர் என எண்ணினர். அவர் இவரிடம் திருக்குறளைப் கொடுத்துப் படித்து வாருங்கள். இரண்டு மாதங்களுள் இராமநாதபுரம் சென்று திரும்பி வருகிறேன் என்ருர். சுவாமிகள் அவர் அன்புடன் தந்த திருக்குறளைப் பெற்ருர். முழுமையும் உடனே மனப்பாடமாக அவரிடம் ஒப்புவித்தார். அதைக்கண்டு வெண்பாப்புலி கிலியுற்ருர். சுவாமிகள் பெருமையை நினைந்து நினைந்து ஒருபுறம் துணுக்குற்று அஞ்சினர். மற்ருெருபுறம் பெரிதும் மகிழ்வெய்தினர். தன்னை மன்னிக்க வேண்டினர். விடை பெற்று இராமநாதபுரம் சென்ருர் அவர்.

குழந்தை சுவாமிகளாகிய நமது துரைசாமி ஞானிகள்பால் அநுக்கிரக விசேடம் பெற்ருர் பலர். சேலம் துரைத்தனக் கலலூரியில் தமிழாசிரியரா யிருந்த சரவணப் பிள்ளை என்பவரும் சுவாமிகள் அருள் பெற்றவரே. அவர் கூறைநாடு கம்பராமாயணப் பிரசங்கம் சாமிநாத கவிராயர் குமாரராவர்.

செட்டால் பாலகுரு செட்டியாருடைய சகோதரர் A. R. சண்முகம் செட்டியார் என்பவரும் சுவாமிகளிடத்து அளவிறந்த பக்தி பூண்டவர். அவர் அடிககடி சுவாமிகளை வந்து தரிசித்து நல்வாக்குப் பெற்றுப் போவார்.

பள்ளிக்கூட உதவி இன்ஸ்பெக்டர் G. தெய்வ சிகாமணி முதலியாரும் சுவாமிகளிடத்துப் பேரன்புடைய வர்.

திருப்பாதிரிப்புலியூரில் நல்லொழுக்கமும், கல்வி யறிவும், அடியார்களிடத்துப் பேரன்பும் உடைய ஆறு முகம் பிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். அவர் செயின்ட் ஜோஸப்ஸ் பிராஞ்சு ஸ்கூல் தலைமையாசிரியர். சுவாமி களிடத்து இடையருத பேரன்புடன் நடந்துவந்தார். அவரைப் போலவே அவர் குடும்பத்தினர் அனைவரும் சுவாமிகளிடம் பக்தி நிறைந்தவர்கள். சுவாமிகள் தந்தை யாராகிய இராசசேகரம் பிள்ளையவர்களிடத்து ஆறுமுகம் பிள்ளையும் அவருடைய குமாரர்களாகிய இரத்தினவேற் பிள்ளை, இராஜேசுவரன் பிள்ளை முதலியோரும் அளவிறந்த அன்புடனிருந்து வந்தனர். அதனுல் அடிக்கடி இராச சேகரம் பிள்ளை அவர்களைப் பாராட்டிக் கூறுவதுண்டு.

## சிவபாத சுந்தரம் பிள்ளை B. A.

ஈழநாட்டு S. சிவபாதசுந்தரம் பிள்ளை B. A. என் பவர் சுவாமிகளிடத்தும் அவர் தந்தையாரிடத்தும் அன்பு மிக்குள்ளவர். சுவாமிகள் பரிபூரணமான பின்பும் அவர் தந்தையாரைத் தமது தந்தையாரினும் மிக அன்பு பாராட்டித் தம்மாலானவை புரிந்து வந்தார். சைவசமய வொழுக்கம் மிக்க இவர் பல உயர்தரக் கல்லூரிகளில் ஆசிரியராகவும், தலைவராகவுமிருந்து பெரும்புகழ் பெற்றுள்ளார். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் சமய சம்பந்தமான பல புத்தகங்கள் எழுதி வெளியிட்டிருக்கிறுர். யாழ்ப்பாணம் விக்டோரியா காலேஜ் பிரின்ஸிபாலாக இருந்து 1933 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றுள்ளார். அலு வலிலிருந்து இவர் ஓய்வு பெற்றும் அறிவு ஓய்வு பெற்ற தில்லை. இலங்கை வல்வெட்டித்துறை கந்தவனத்திலிருந்து கொண்டு சுவாமிகளின் தந்தையாருக்கு இவர் ஸ்ரீமுக ஆடி,

கார்த்திகை (1933 ஜூலை, டிசம்பர்) மாதங்களில் எழுதிய கடிதங்களால், [ "நான் உத்தியோகத்தினின்றும் விலகி 'கந்தவனம்' எனப்படும் திவ்விய க்ஷேத்திரத்துக்குச் சமீபத்தில் வசிக்கிறேன். இது பருத்தித்துறையிலிருந்து மூன்று மைல்" "நான் இப்போது இந்தப் புராதன ஸ்தலத்திலே வாசம்பண்ணி சுப்பிரமணியப் பெருமானைத் தினமும் தரிசிக்கும் பாக்கியத்தைக் கடவுள் தந்திருக்கிறார். வேண்டிய அளவு தேக சுகமுந் தந்தருளினர். படிப்பிலும் நூல்கள் எழுதுவதிலும் பொழுதுபோகின்றது" ] இறைவன் திருவடிப்பற்று மறவாமையும் இவருடைய நூலாராய்வது நூலெழுதுவது ஆகிய காரியங்களில் தளரா ஊக்கம் பெற்றுள்ளமையும் நன்கு புலனாகின்றன. அகமும் புறமும் தூய்மையுடையவர் இவர்; சிவபூஜா துரந்தரர்.

## பொறையாறு முருகேச நாடார்.

தரங்கம்பாடிக்கு அணித்தாயுள்ளது பொறையாறென்னும் ஊர். அங்கு பரம்பரைச் செல்வக் குடும்பத்தினராகிய தவசி முத்து நாடார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் குடும்பத்திலுள்ள முருகேச நாடார் என்பவர் நம் குழந்தைச் சுவாமிகளிடம் அருளுபதேசம் பெற்றார். அவர் ஆங்கில மொழி முதலியவற்றில் பேரறிஞர். துறவியாகித் திருவொற்றியூருக்குச் சென்று சதா நிஷ்டராக அமர்ந்திருந்தார்.

## நான் சுவாமிகள் அருள்பெற்றது.

பறங்கிப்பேட்டை என் சொந்த ஊராகலின் நான் சுவாமிகளை அடிக்கடி தரிசிக்கும் புண்ணியப் பேற்றை இயல்பாகவே பெற்றுள்ளேன். இவரைத் தரிசிக்கும் பேறு மட்டுமின்றி இவரோடு அளவளாவி மகிழும் பேறும் எனக்குக் கிடைத்தது. தரிசிக்குங் காலங்களிலெல்லாம் இவர் ஏதேனும் சொற்களையும், சொற்றொடர்களையும்,

அருங் கருத்துக்களையும் எடுத்துக்கூறிக் கவிகள் இயற்றச் செய்வார். அக் கவிகளைப் பற்றிப் பாராட்டிக் கூறுவதுமுண்டு. அவ்வப்போது சுவாமிகள், எனக்கு அருளிய அருட் செயல்களை அப்பாக்களில் குறிப்பிட்டுள்ளேன்.

கி. பி. 1892 நவம்பர் வேயில் சுவாமிகள் விஷயமாக நான் பாடிய பாட்டுக்களை இதன் அனுபந்தமாகச் சேர்த்திருக்கிறேன். சுவாமிகள் இப்பாடல்களைக் கேட்டு "மாலை சூடி" எனச் சிறப்புப் பெயர் சூட்டி அடியேனை ஆசீர்வதித்தார்கள்.

நான் ஒரு சமயம் சென்னைக்குச் சென்று அங்கு சில நாட்கள் தங்கி ஊருக்குத் திரும்பி வந்தேன். வந்தது முதல் ஒரு வகையான கடுஞ் சுர நோயால் மிக அவதியுற்றேன். மருத்துவர் பலர் மருந்து கொடுத்தும் அந்நோய் குணப்படவில்லை. சன்னியின் கொடுமையும் அதிகரித்திருந்தது. வீட்டிலுள்ளார் அனைவரும் பெருந் துன்புற்றார்கள். அன்பர்களும் மிக அயிர்த்தனர். சுவாமிகள் திடீரென அடியே னிருக்குமிடத்துக்கு வந்தது. அடியேனைக் கருணையோடு கடைக்கணித்தார்கள். 'அஞ்ச வேண்டா' என அபயமளித்தார்கள். தமது அருமைத் திருக்கரத்தால் அடியேன் புலாலுடம்பில் தொட்டுத் திருநீறு பூசியருளினார்கள். உடனே சன்னிக் கொடுமையும், சுரநோயின் துன்பமும் தணிந்தது. உடல் உரம் பெற்றேன். சுவாமிகள் அடியேன்மேற் கொண்ட பெருங் கருணையை நினைந்து நினைந்து உருகினேன். அந்நிலையை இப்போது நினைத்தாலும் என் உள்ளம் உருகுகின்றது.

ஒரு சமயம் நானும், என் அன்பர்களாகிய கோவை-திருச்சிற்றம்பலம் பிள்ளை, சிதம்பரம்-இராமலிங்கம்பிள்ளை, சோமசுந்தர முதலியார் முதலியோரும் சுவாமிகளைத் தரிசித்து அளவளாவி யிருந்தோம். அப்போது சுவாமிகள் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் சில பல அநுக்கிரகம்

செய்தருளினார்கள். சில உவமைகளிலும் வைத்துக் கூறினார்கள். அனைவரும் அதிசயிக்குமாறு செய்யுளொன்றால் எனக்கு ஆசீர்வாதமும் செய்தருளினார்கள். அச்செய்யுள் வருமாறு:—

"பண்டித ராவீர் பதினெண் மொழிகளில்
ஒண்டிறல் வல்லவ ருத்தம யோகியர்
திண்டிறற் சித்தர் சிவபரன் றொண்டர்கள்
கொண்டநற் சீலங் குறித்தறி வீரே." என்பது.

நான் பாடிய கவிகளில் இவ்வருட் செயல்கள் நன்கு விளங்கும்.

## பாலசித்தர் ஆனந்த நிட்டை கூடிச் சமாதியுற்றது.

முற்கூறிய பாளையம் முத்தையா சுவாமிகள் வழக்கம்போல் ஒருநாள் இவரைத் தரிசிக்க வந்தார். அப்போது இவர் அவரைத் தனித்தழைத்தார். இருவரும் தனித்திருந்தனர். கால் ரூபாவுக்குத் துட்டு எத்தனை என்றார் இவர். அவர் நாற்பத்தெட்டு என்றனர். மூன்று துட்டுக் கழித்தால் எவ்வளவென்றார் இவர். நாற்பத்தைந்து என்று விடை பகர்ந்தார் அவரும். உடனே இவர் அவரை நோக்கி 'இன்று முதல் நாற்பத்தைந்தாம் நாள் நான் கும்பிட்ட கையோடிருத்தல் வேண்டும். நீவிர் வசிக்கும் மலையாண்டவர் மலைக்கு இன்று நாற்பத்து நான்காம் நாள் எம்மை வந்து அழைத்துச் செல்க' என்றனர். அவரும் இவர் குறிப்பிற்கு இசைந்து சென்றார்.

திருவதிகையில் திலகவதியார் திருமடம் ஒன்று உண்டு. அங்கு சிவஞான சுவாமிகள் என்பவர் ஒருவர் இருந்து வந்தார். அவர் விருப்பப்படி திருவதிகைக்கு இவர் சென்றார். இவர் தந்தையாரும் உடன் சென்றனர். அன்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருநாள். அங்கு சிவ

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



சென்னப்ப நாயக்கன் பாளயம் மலையாண்டவர் மலையின் கண்

ஸ்ரீ துரைசாமி ஞானிகள் சமாதி.

ஞான சுவாமிகளும் இவரும் அளவளாவி யிருந்தனர். இவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டார். அவர் இவரை 'இனி எப்போது காண்பது' என்றார். இவர் அவரைப் பார்த்து 'சொப்பனத்தே காணலாம்' எனக் குறிப்பித்தார். பிறகு சென்னப்பநாயக்கன் பாளையத்தை நோக்கி இவர் வந்துகொண்டிருந்தார். முத்தைய சுவாமிகளும் முன்பு இவர் கூறிய நாள் அதுவாதலின் இவரை அழைத்துச் செல்ல வண்டியுடன் வந்தார். இவரும் அவரைக் கண்டு மகிழ்ந்தார். இருவரும் மலையை அடைந்தனர். அம்மலையில் துறவிகள் பலர் உளர். அவருள் ஒரு பிராமண சந்நியாசி யைப் பார்த்து, 'நாளை மாலை 6 மணிக்கு சோதி தீபம் தர வேண்டும். செய்வீரா?' என்றார். அவரும் அதற்கு ஒத்துக்கொண்டார்.

மறுநாட் பகல் மணி பன்னிரண்டாயிற்று. தந்தையை அழைத்தார்; 'உங்கட்கொன்றும் குறைவு வராது. நீங்கள் தங்குமிடமெல்லாம் சங்கரன் கயிலாயமே' என்றார். மோனம் பூண்டார். அங்குள்ள நீர்நிலையிலிறங்கி ஆனந்த நிட்டையில் வீற்றிருந்தார். சூரியன் குடகடல் மறைந்தான். பிராமண சாதுவும் அங்கு வந்தார். சோதி தீபம் கொடுத்தார். அங்கிருந்தோர் அனைவரும் சூழ்ந்து வியந்தனர். நங் குழந்தை சுவாமிகள் பரிபூரணமடைந் தார்கள். இவர் பரிபூரணமடைந்தது விசுவாவசு சித்திரை 20௳ இரேவதி நாள் மாலை மணி ஆறு.

---

பாலசித்தர் பாதாம்புயம் பாலிக்க.

## சுவாமிகள் ஜாதகம்.

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| கே<br>சு | இராகு | | |
| | | | ராகு<br>செ |
| சூ | சந்<br>புத | ல | குரு |

பார்த்திப௵ மார்கழி௴ அனுட நாள் சுப ஜனனம்.

(1885—86.)

சனி திசையில் ஜெனன காலத்தில்

நிலுவை ௵ 5 — ௴ 11 — நாள் 27.

அனுபந்தம் I.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பறங்கிப்பேட்டை

# ஸ்ரீ துரைசாமி ஞானிகள் துதி.

இவர் ஏழாம் பிராயத்தில் 6—11—1892-ல் தமது திருமாளிகையிலே குழுமிய பேரவையில் சில சொற்றொடர் பொருட்டொடர்களைத் தந்து பாடுக எனப் பணித்தபோது இந்நூலாசிரியரால் பாடப் பெற்றவை.

## 1. வாழ்த்துப் பாடல்.

### (a) அருள் வாழ்த்து.

1 மாமுகற் போற்றுது மாமுகற் போற்றுதுந்
தாமுதற் கூறுந் துரைசாமி ஞானிதன்
றாமுகந் தானீத லான். 1

2 சேயவற் போற்றுதுஞ் சேயவற் போற்றுதுஞ்
சேயவற் செப்புந் திறற்றுரை சாமிதன்
சேய்முகந் தானீத லான். 2

3 தூயவட் போற்றுதுந் தூயவட் போற்றுதுந்
தூயவற் சொல்லுந் துரைசாமி ஞானிதன்
றாமுகந் தானீத லான். 3

### (b) முன்றில் வாழ்த்து.

4 ஞான மோன நலமவை நண்ணின
தான வண்டத் தடக்கோ னெருங்கினன்
பான லங்கட் பராபரை தோற்றினள்
மோன நற்றுரை சாமிதன் முன்றிலே. 1

5 இருக்கு நான்கு மறைக ளியம்பின
விருக்கு மண்ட ரிதய நிறுவினர்
கருக்கு மெவ்வக் கருத்து மறைந்ததால்
முருக்கு நற்றுரை சாமிதன் முன்றிலே. 2

6 அன்பி னுடலும் பாடலுங் கூடின
துன்பி னீங்கச் சுகமுறத் தோன்றிற்று
மன்பி னேங்கிய மாவரு ணபுரி
முன்ப னுன்ற முனித்துரை முன்றிலே. 3

## (c) சீர் வாழ்த்து.

7 மோனக் கொழுந்தே முழுமுதலே முன்வருணைத்
தானக் கொழுந்தே தவநிலையே சான்றோர்தம்
பானக் கொழுந்தே பராபரமே சாமிதுரை
ஞானக் கொழுந்தே நடுக்கின்றி யேநிற்பாய். 1

8 அத்தித் துரையே யருட்டுரையே மெய்த்துரையே
பத்தித் துரையே பருமணியே சாமிதுரை
முத்தித் துரையே முனமென்னைப் பாடுகெனுஞ்
சித்தித் துரையே சிதைவின்றி யேநிற்பாய். 2

9 முத்தப் பெருமானே மூர்த்தியருட் சாமிதுரை
கர்த்தப் பெருமானே கற்றோர் தொழுதிறைஞ்சும்
புத்தப் பெருமானே புத்தன் புகல்வருணைச்
சித்தப் பெருமானே சீருற்று நீநிற்பாய். 3

## (d). பதி வாழ்த்து.

10 அமரடு பெரியவ ரறிவினை யறிபவர்
திமிரொடு திறல்வினை தெளிதரு புலவரர்
சமரொடு சினவினை சமரறு மரபவ
ரமரொடு மருள்பவர் வருணையி னமர்வரே. 1

11 திருவொடு நலமொடு சிரமொடு வருபவர்
செருவொடு சினவினை செகுதிறல் விரகவர்
கருவொடு பலநல கலமுற வணிபவ
ரருவொடு மமர்பவர் வருணையி னமர்வரே. 2

12 இருவினை யறுபவ ரிசையுற வருபவர்
திருவினை யுறுமவர் திறலுறு வலியவர்
மருவினை யறுபவர் மருளற வருதவ
ரருவினை யருள்பவர் வருணையி னமர்வரே. 3

## (e) மொழி வாழ்த்து.

13 மூவினையுந் தன்னருளான் முனமுடித்த முழுப்பொருளான்
தாவினையை நீக்குமருட் டனவருணைத் துரைசாமி
தேவினையும் பாவினையுந் தெரிசிக்க நலமளித்த
தீவகமான் பேர்கேளாச் செவியென்ன செவியே
திகம்பரனோர் சீர்கேளாச் செவியென்ன செவியே 1

14 பாட்டனைத்து நான்பாடப் பலனளித்த திறனாளி
வாட்டனைத்து மாண்பருளும் வளவருணைத் துரைசாமி
வீட்டனைத்து நற்கதிசேர் வியன்றூரியப் பதியாளன்
தேட்டனைத்தின் சீர்கேளாச் செவியென்ன செவியே
திகம்பரனோர் சீர்கேளாச் செவியென்ன செவியே. 2

15 இன்பநிலைக் கோத்திட்டை யெழிற்சித்த மரபாளன்
வன்புநிலை மாற்றுசமைப் பார்த்திபகன் மார்கழியிற்
றுன்பநிலை போக்குதிரு வனுடநாட் பூவுதித்த
திண்ணனிலை கேளாத செவியென்ன செவியே
திகம்பரனோர் சீர்கேளாச் செவியென்ன செவியே. 3

## (*f*) உரிமை வாழ்த்து.

16 திருவருண் ஞானத் திறத்தோர்க்குத்-தேவன்
திருநெறி கூடுந் திருத்துறை சாமி
பருவர னீக்கிப் படியது தந்தான்
பாவலர் கோமாற்குப் பாவலன் கண்டீர்
பார்வேந்தர் கோமாற்குப் பாவலன் கண்டீர். 1

17 சீர்ப்பதி பூத்த திருவருட் கூத்தினன்
சீர்ப்பதி பாடுந் திருத்துறை சாமியெம்
பார்ப்பதி பாகப் பரம னருளினன்
பாவலர் கோமாற்குப் பாவலன் கண்டீர்
பார்வேந்தர் கோமாற்குப் பாவலன் கண்டீர். 2

18 பத்தவை பெற்ற பரமன் வருணையன்
பத்தவை தந்த பரியை யளித்தவன்
பத்த ரவைசூழ் பறங்கியில் மேவினான்
பாவலர் கோமாற்குப் பாவலன் கண்டீர்
பார்வேந்தர் கோமாற்குப் பாவலன் கண்டீர். 3

## (*g*) வருகை வாழ்த்து.

19 மூர்த்தி தலந்தீர்த்த முன்னமே காட்டினன்
வார்த்தை வலவடிக் கெல்லீரும் வம்மெல்லாம்
நேர்த்தித் திறம்பாடி நித்தன் வருணைவாய்க்
கார்த்திகை மைந்தனைக் காணுதும் வம்மெல்லாங்
காகுத்தன் சேயினைக் காணுதும் வம்மெல்லாம். 1

20 ஆன்றீ ரறிவீ ரலகில் பெருஞ்சித்தன்
மான்றீ ரருளடிக் கெல்லீரும் வம்மெல்லாந்
தேன்றேர் குரவன் றிருக்கிருஷ் ணுபுரியின்
வான்[illegible]றரும் வள்ளலைப் பாடுதும் வம்மெல்லாம்
வா[illegible]றை மாமகற் பாடுதும் வம்மெல்லாம். 2

21 சூட்[illegible]த் திறத்தீர் துரியன் சிவஞானி
மாட்[illegible]த் திருவடிக் கெல்லீரும் வம்மெல்லாம்
ஆட்சிச் சகமிசை யாள்துரை சாமிக்கோன்
வாட்சித்தன் கூத்தினை வாழ்த்துதும் வம்மெல்லாம்
மன்ன னதியோகி வாழ்த்துதும் வம்மெல்லாம். 3

## (*h*) ஊசல் வாழ்த்து

22 இருவினைப் பாசத் திளைப்புண்டே யெற்ற
விருவிசும்பிற் பாதலத் திம்பருறை நாட்டுக்
கருவிளிம்புற் றீங்கழியாக் கண்ணம்பெற்று
வெறுவெளியூ டின்பவெள்ளத் தாடாமோ வூசல்
விருதுடையான் வெல்வருணை யாடாமோ வூசல். 1

23 படங்கொண் மணியூசன் மேவிரீஇத் தேவன்
வடங்கொ டிருப்பாட்[illegible] வாலி தியம்பிப்
படங்கொ டிறலி பணிப்படங்கப் பாடித்
தடங்கொ டிருநோக்கத் தாடோமோ வூசல்
தண்கிருஷ்ணை மாநகர்வா யாடாமோ வூசல் 2

24 அனகவுமா பதிசரண ராடி ரூச
லமலசிதா காசபதி யாடி ரூசல்
கனகசபா நடவரத ராடி ரூசல்
கமனதயா பரசொருப ராடி ரூசல்
வினகதுரை சாமிபர ராடி ரூசல்
விமலசுகோ தயமுதல்வ ராடி ரூசல்
பனகபூ டணசகித ராடி ரூசல்
பரமகுரு பரர்வருணை யாடி ரூசல். 3

## (*i*) பாடல் வாழ்த்து

25 மூல வினைபோக்க முத்தர் முயலுவரே
கால வினைகடந்த கந்தன் றிருமுன்றிற்
காவலர்கோன் சித்தன் கணிக்க வருள்சேரும்
ஞானக் கொடிபாடும் பாடலே பாடல்
நாதன் வருணைநகர்ப் பாடலே பாடல். 1

26 குற்றங் குறைநீக்குங் கொள்கை முயலுவரே
பெற்றங் களிகூரும் பெம்மான் றிருமுன்றிற்
பேரருட் சித்தன் பிணிக்க வருள்சேரும்
பெற்றித் தகைபாடும் பாடலே பாடல்
பெருமை வருணைநகர்ப் பாடலே பாடல். 2

27 நன்மைச் சுகமுற்ற நல்லோர் விரும்புவரே
புன்மைச் சுகங்கடந்த புத்தன் றிருமுன்றிற்
போதனருட் சித்தன் புந்தி களிகூரும்
போதத் தமிழ்பாடும் பாடலே பாடல்
புரவலன் சீர்வருணைப் பாடலே பாடல். 3

## (*j*) வாழியல் வாழ்த்து

28 பூமடந்தை நாமடந்தை பொற்போ டெணைமணக்கத்
தாமடந்தை தந்தான் றனிச்சரணம் வாழியரோ

வாழியரோ வாழி வரும்பெண்ணை மாநதிதான்
சூழ்தரு நாட்டினிடைக் கோமான்றன் றொல்குலமே. 1

29 யோகநிலை ஞானநிலை யோகத் தெப்புனைணரச்
சோகநிலை வாட்டுஞ் சுதன்சரணம் வாழியரோ
வாழியரோ வாழி வரும்பெண்ணை மாநதிதான்
சூழ்தரு நாட்டினிடைக் கோமான்றன் றொல்குலமே. 2

30 தானவனே தானவனே தானத் தவனவனே
தானலபி டேகன் றனிச்சரணம் வாழியரோ
வாழியரோ வாழி வரும்பெண்ணை மாநதிதான்
சூழ்தரு நாட்டினிடைக் கோமான்றன் றொல்குலமே. 3

---

## 2. கனக மாலை.

---

### (*a*) நாம வழக்கம்.

31 கருமாலைப் பெற்றடியேன் கலங்கலுறு வண்ணங்
களித்தநின தருளடியைக் கனவினுங்கண் டடைவான்
பெருமாலைப் பெருந்தேவர் சித்தர்முதற் பெற்றிப்
பெருந்தகையோர் பெறும்பேறு பெருகுறுநின் புகழை
யுருமாலைக் கண்டடியே னுள்ளபடி யுரைக்க
வுவப்புடனே வருகவென்றிங் குண்மைநெறி கூறித்
திருமாலை சூடியெனத் திருப்பெயரோன் றளித்தாய்
திருவருணைத் துரைசாமி ஞானியெனுந் தேவே. 1

32 மருண்மாலைப் பெற்றடியேன் மயக்கமுறு வண்ணம்
மாண்பினின தருளடியை மனத்தினுங்கண் டடைவான்
தெருண்மாலைப் பெருந்தேவர் சித்தர்முதற் சீர்த்தி
திகழ்தகையோர் பெறும்பேறு திகழுறுநின் புகழைப்
பொருண்மாலை கண்டடியேன் புகன்றபடி யுரைக்கப்
புனிதமுடன் வருகவெனப் புகழுநெறி கூறி
அருண்மாலை சூடியென வரும்பெயரோன் றளித்தாய்
அமர்வருணைத் துரைசாமி அண்ணலெனுந் தேவே. 2

33 வன்மாலை யடைந்தடியேன் மயக்கமுறு வண்ணம்
மாண்பினின தருளடியை நனவினுங்கண் டடைவான்
நன்மாலைப் பெருந்தேவர் நனிபெருகுங் கீர்த்தி
நயந்தவர்கள் பெறும்பேறு நானிலத்தின் மிகவே
மன்மாலைக் கண்டடியேன் மகிழ்ந்தபடி யுரைக்க
வளமுடனே வருகவென வனமொழிகள் கூறி
யின்மாலை சூடியென வியற்பெயரோன் றளித்தாய்
எழில் வருணைத் துரைசாமி ஞானியெனுந் தேவே. 3

## (b) தாராட்டு வழக்கம்

34 தூய சிவமே துரைசாமி ஞானியெனும்
சேய பெருமானே செல்வனே ஆராரோ
ஞான மயமாக நற்றவத்திற் குன்றாத
மோன நிலையுணர்த்தும் முக்கியனே ஆராரோ.
பறங்கி நகர்வாழப் பன்னுஞ் சிகாமணியே
திற[illegible]கொள் துரைசாமிச் சீராளா ஆராரோ.

## (c) வாழ்த்து வழக்கம்

35 அப்பிர மப்பொரு ளாகி யான்றவம்
மொப்புவ னத்துள முனிவர் கூட்டமுஞ்
சுப்பிர தீபத்துத் துரியப் பாலனுஞ்
சுப்பிர மணியனந் துரையும் வாழியே.

ஸ்ரீ பாலசித்தர் பாதாம்புயம் பாலிக்க.

அனுபந்தம் II.

உ

# ஸ்ரீ குழந்தைச் சுவாமிகள் சரிதப் பதிகம்.

பண்டிதை ஸ்ரீ அசலாம்பிகை அம்மையார்
இயற்றியது.

## அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

1 பூமேவு புண்ணியனும் புனல்மேவு கண்ணியனும் போற்றி வாழ்த்த
மாமேவு மணியவையு ளெம்பெருமா னருணடங்கூர் மாண்பு வாய்ந்த
பாமேவுந் திருத்தில்லை நகர்க்கணித்தா யுறுபறங்கிப் பேட்டை வாழுந்
தூமேவு மிராஜசே கரம்பிள்ளை யென்றுரைக்குந் தூயோன் றன்பால்.

## வேறு

2 அம்மரபோர் முன்பாற்று மருந்தவத்தி னங்குரமோ
பொய்ம்மலிந்த செகத்தியல்பிற் புணராது மாயையெனுஞ்
சும்மையிருட் டிரைகீறிச் சுடர்த்தெழுந்த கதிரவனே
செம்மைபெறு மெய்ஞ்ஞானச் செழுந்திரளோ விவனென்ன.

3 வந்துதித்தங் கிளங்குழவிப் பருவமுதல் மற்றுமயல்
மைந்தர்தமைப் போலாது மாண்புதுமை பலகாட்டிச்
சிந்தையுறச் சிவசின்னந் தரித்தவர்கள் பரிந்தெடுக்க
முந்துளச்சென் றல்லாதார் வருகவென முகங்கோட்டி.

4 ஆண்டுறுமூன் றினின்மரபி லாற்றுறுநற் சௌளவினை
வேண்டுவதன் றெனவிலக்கி விரும்பிவரு மன்பினர்க்குக்
காண்டரிதாய் மேனடக்கக் கடவனவு முணர்ந்துரைத்து
மாண்டபல வற்புதங்க ளிதுபோலும் வகுத்தருளி.

5 கண்டோர்கண் ணற்குழந்தைச் சாமியெனக் காரணப்பேர்
கொண்டோதச் சிறந்துணர்த்தக் குருவொருவ ரில்லாமே
யண்டிவருந் தகையுடையோ ரனைவருக்குந் தான்குருவா
யெண்டிசையுங் களிகூர வீரொன்பா னகவைதனில்.

6 ஐயொன்பான் தினங்களிற்று னருட்சோதி யுட்கலத்தல்
மெய்யன்பர் சிலரிடத்திற் குறிப்பாக வெளிப்படுத்திச்
செய்யவிசு வாவசு மேட மதியிருபான் றிகதியொடு
துய்யவிரே வதி யுடுவிற் றுலங்குசேய் வாரமதில்.

7 திருமாணி குழியென்னுந் திருத்தலத்தின் குடபாலில்
வருமாண்பு மிகுபுட்பா சலமென்னும் வரைநாடி
யருமாண்பு மிக்குடைய வ[illegible]புடையார் சிலரோடுந்
தருமாண்டு புரிந்திடுநற் றந்தையொடு நடந்தெய்தி.

8 அப்பாடற் செல்வனென வகன்றிடுங்காற் றந்தைதனை
மெய்ப்பான கருணையொடு முகநோக்கி நீர்மேவு
மெப்பாலுங் கைலாய மாகிடுமோர் குறையிலெனச்
செப்பாமற் செப்பிவிடை தருகவெனச் செலவேற்று.

9 மல்குசிவா னந்தமெனு மாண்புனலு ளனந்தரமும்
புல்கியதன் னுயர்நிலையைப் புறத்தவர்க்குத் தெரிப்பான்போ
லல்கியநீர் நிலையொன்றுங் கயவிலிருந் ததின்மூழ்கி
யொல்கியநற் சமாதியதா யுகந்தபர வெளியானார்.

10 முற்பிறப்பிற் றவமனைத்து முடித்தவர்க ளென்றுரைக்கும்
விற்பனர்க்குந் தவழ்குழவிப் பருவத்தே மெய்ஞ்ஞான
முற்பவமா மெனநூல்க ளுரைத்திடக்கேட் டிடுகலது
கற்பனையன் றிக்கலியிற் கண்கூடாக் கண்டனமே.

சுபம்.



நிற்பவர்:— 1. இராஜசேகரம் பிள்ளை. 2. பிராமண சந்நியாசி. 3. முத்தைய சுவாமிகள்.
4. சின்னப்பா முதலியார்.

நாற்காலியில்:— சுவாமிகள்.

# பறங்கிப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிர[மணி]ய சுவாமிகளின் வமிசாவளி.

பறங்கிப்பேட்டை [..]மரமே[..]வில் தெரு
ப. சபாபதி பி[ள்ளை]—சிவகாமி ஆச்சி

- 1 சிவசிதம்பரம் பிள்ளை a. (தங்கத்தம்மாள்)
  - 1 சோமாஸ்கந்த பிள்ளை c. (காமாக்ஷி)
    - 1 ஆசிரியர் கோவிந்தசாமி பிள்ளை (மங்கையர்க்கரசி அம்மாள்)
      - இராஜகோபால பிள்ளை (அகிலாண்டத்தம்மாள்)
        - 1 சொக்கலிங்கம்
        - 2 செல்லம்மாள்
        - 3 சந்திரசேகரன்
        - 4 லலிதா
        - 5 சாரதா
    - 2 மீனாக்ஷி அம்மாள்
    - 3 பாப்பம்மாள்
  - 2 சொர்னத்தம்மாள்
- 2 சந்திரசே[கரம் பி]ள்ளை
  - இராஜசே[கரம் பி]ள்ளை, (தங்க[..]மாள்)
    - 1 காயாம்பு அம்மா[ள்] (சிதம்பரம் ரெத்தி[ன]ம் பிள்ளை)
      - 1 சரஸ்வதி அம்மாள் (உக்கடை முத்துவேற் பிள்ளை)
        - 1 அழகைய பிள்ளை
        - 2 முருகையா
        - 3 காமா[க்ஷி]
        - 4 பத்மாவதி
        - 5 திருநாவுக்கரசு
        - 6 சம்பந்தன்
        - 7 விசாலாக்ஷி
        - 8 ஞானசேகரன்
      - 2 மாணிக்கத்தம்மாள் (சிதம்பரம் கோவிந்தசாமி பிள்ளை)
    - 2 சாம்பவர்னம் (சிதம்பரம் சபாபதி பிள்ளை)
    - 3 சந்திரசேகரம் பிள்ளை
      - சுப்பலக்ஷ்மி
    - 4 பாலசுப்பிரமணிய சுவாமிகள்
    - 5 கோவிந்தசாமி பிள்ளை
- 3 பிரமராய பிள்ளை
- 4 சோமாஸ்கந்த பிள்ளை
- b. [..]துவேலம்மாள்
- [6] c. [..]பரியநாயகத் தம்மாள்
- அபிராமி அம்மாள்

---

## பறங்கிப்பேட்டைக் குடும்பத்துக்கு ஏழு எட்டுத் தலை[..]றயாத திருவாரூர் புகழாபரண வீதியில் ஸ்ரீ தியாகேசன் அடியார்களின் விழிப்ப[..]மர் கூட்டத்தில் சம்பந்தம்

உடையவா[..] வ[..]ணியா பிள்ளை

- 1 அருணாசலம் பிள்ளை (b. முத்துவேலம்மாள்)
  - 1 சுப்பிரமணிய பிள்ளை
  - 2 c. காமாக்ஷி ஆச்சி
  - 3 சொர்ணத்தம்மாள்
  - 4 சோமசுந்தரம் பிள்ளை
- 2 சரவணப்பிள்ளை
- 3 a. தங்கத்தம்மாள்

# பிழையும், திருத்தமும்.

| | | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| அணிந்துரை பக்கம் — ii | | | |
| | | சி[illegible]திரபானு | சித்திரபானு |
| | | சித்தி[illegible]ரத் திங்கள் | சித்திரைத் திங்கள் |
| | | [illegible] ரேவதி. | ரேவதி நாள் |
| 12-பக். | [illegible]-வரி | விடுமுற பெற்ருர் | விடுமுறைபெற்ருர். |
| 16 .... | 5-வ[illegible] | ஐய[illegible] | ஐயர் |
| 17 .... | 17-வரி | துன்புற்றதை | துன்புறுவதை |
| | 26-வரி | கிறுக்க்ர் | கிறுக்கா |
| 18 .... | 25-வரி | வேலைபார்த்தார் | வேலைபார்த்தார். |
| | 29-வரி | விருந்துவருகிருர் | விருந்துவருகிருர். |
| 19 .... | 29-வரி | வந்திருந்தார் | வந்திருந்தார். |
| 20 .... | 31-வரி | விபரங் காண்க. | விவரங் காண்க. |
| 23 ... | 11-வரி | சங்கர நாயக்கர் | சங்கரைய நாயுடு |
| .... | 14-வரி | ரெட்டியார் | ரெட்டியார், |
| 26 .... | 23-வரி | கலலூரியில் | கல்லூரியில் |
| | 29-வரி | அடிககடி | அடிக்கடி |
| 29 .... | 22-வரி | தணிந்தது | தணிந்தன |
| 30 .... | 26-வரி | உண்டு | உண்டு. |
| 31 .... | 15-வரி | குறைவு | குறைவு |
| 32 | | இராகு | இராசி |
| சமாதிப்படம். | | | |
| | | சென்னப்பநாயக்கன் பாளயம் | சென்னப்பநாயக்கன் பாளையம் |
| 37 .... | 3-வரி | தெப்புணைரச் | தெணைபுணரச் |
| 38 .... | 12-வரி | காப்பிர | சுப்பிர |
| வமிசவாளி | | | |
| | | 4. பத்மாவதி | 4. பத்மாவதி |

(க. குருசாமி தேசிகர்)

---

இப்புத்தகப் பிரதிவேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற் பெறலாம் :—

The Manager,
ESTATE OFFICE,
Bikshandar Koil, Trichi Dt.

166

VETRIVEL